REGISTERED AT THE G. O. P. AS A NEWSPAPER

JAFFNA ... NOV 11 1946 VADDUKODDAI, CEYLON.

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 17 | சுன்னுகம் — விய — ஐப்பசி உரு, 10-11-'46—ஞாயிறு | இதழ் 16

எஸ். எஸ். சண்முகநாதன் அன் சன்ஸ்
வண்ணார்பண்ணை : : யாழ்ப்பாணம்

கந்தோருக்கு தேவையான கணக்குப்புத்தகங்கள், 'பைல்', 'கிளிப்', பென்சில், பேனு, மை பலவித காகிதங்கள் மற்றும்பல சாமான்களும் விலை சகாயமாய் தொகைக்கும் சில்லறைக்கும் எங்களிடம் கிடைக்கும்.

S. S. SANMUGANATHAN & SONS
VANNARPONNAI : : JAFFNA
[2950]

# நாட்டில் நிர்வாகச்சிதைவு

## கலவரங்களுக்குக் காரணம்

[கொழும்பு நிருபர் கடிதம்]

**இலங்கையின் எதிர்காலப் பிரதம மந்திரி என்றுகூறப்படும் ஸ்ரீ சேனநாயகா அவர்களுக்குப் பொதுஜன சேவைப்பகுதியின் நிர்வாக முறைகள் சிறிதளவும் பிடிக்கவில்லை. ஆகவே அவர் நாட்டின் நிர்வாகத்தில் நம்பிக்கை யிழந்துவிட்டார். இது காரணமாகப் பொதுஜனசேவைப் பகுதியினருடன் தாம் இனிச் சேர்ந்து கொள்ளவில்லையெனவும் தெரிவித்துள்ளார்?**

சமீபத்தில் நிகழ்ந்த வேலை நிறுத்தம் பற்றியும் அதன் விளைவுகளைப் பற்றியும் மந்திரிசபைக் கூட்டமொன்றில் ஆராய்ந்தபோது சபை முதல்வர் ஸ்ரீ சேனநாயகா, நாட்டின் நிர்வாகச் சிதைவுகளைப்பற்றிக் குறிப்பிட்டார். இது சம்பந்தமாக அவர் தமது கருத்துக்களை வெகு விரைவிற் பகிரங்கப்படுத்துவார் எனவும் தெரிகின்றது. பொதுஜனசேவைப் பொறுப்பினர் நடந்துகொள்ளும் முறை நாட்டிலே குழப்பங்களையும் பரபரப்பையும் உண்டாக்குகின்றன வென்பது ஸ்ரீ சேனநாயகாவின் அபிப்பிராயம். நிர்வாகப் பொறுப்பினரின் அபிப்பிராய பேதங்களே இத்தனை சீர்கேடுகளுக்குங் காரணமெனவும் அவர் கூறுகின்றார்.

### பொலிஸ் இயலாமை

உதாரணமாக வேலைநிறுத்தத்தின் போது பொலிஸ் பகுதியினர் பொதுமக்களுக்கு வேண்டிய பாதுகாப்புக்கள் அளிக்க முடியாத நிலையில் இருந்தனர் எனவும், கொழும்பு 'மேயர்' ஜனக் கூட்டத்தாலே தாக்கப்பட்ட சம்பவம் பொலிஸ் நிர்வாகத்துக்கு ஒரு 'விழுக்காடு' எனவும் அவர் எடுத்துக்காட்டுகின்றார். தவிர கொழும்பு 'மேயரை'த்தாக்கி அவருக்கு ஊறு விளைத்த பேர்வழிகளைப் பொலிஸார் இன்றுவரை தேடிப்பிடிக்கவில்லை யெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுருங்கக் கூறினுல் பொதுஜன சேவைப் பொறுப்பாளர் நிர்வாக முறைகளிற் பிணக்குகளை உண்டாக்குவதால் நாட்டிற் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. ஆகவே அவர்கள் மீது ஸ்ரீ சேனநாயகா குற்றஞ் சுமத்துகின்றார்.

### விசாரணை செய்க

கடந்த மாதம் 22-ந் திகதி டொக்டர் என். எம். பெரேரா அவர்கள் 'கைது' செய்யப்பட்ட விஷயமாக 'லங்கா சுயராட்சியக் கட்சி' மிகுந்த அக்கறை எடுக்கின்றது. சமீபத்தில் இக்கட்சி ஒரு நிர்ணயம் சமர்ப்பித்திருக்கின்றது. அதன்படி இக்கணமே ஸ்ரீ பெரேரா அவர்களின் கைது சம்பந்தமாக நீதிப் பிரமாணங்களுக்கேற்பப் பூரண விசாரணை ஒன்று நிகழ்த்த வேண்டுமென இக்கட்சி கோருகின்றது.

வேலை நிறுத்தம் ஒன்று தோன்றியதன் காரணமாக நாட்டின் நிர்வாக ஊழல்கள் வெளிக்கிளம்புவதும், நிர்வாகப் பொறுப்பினின்றும் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் மெல்ல விலகி நிற்க ஆலோசிப்பதும் இலங்கையின் தலைவிதிதான்.

### சேர் ஒலிவர் வந்தார்

ஐந்துமாதகாலமாக அரசாங்கச் செலவில் பறந்து திரிந்து விட்டு திக்காரியதரிசி சேர் ஒலிவர் குணதிலகா பத்திரமாக ஊர் திரும்பியிருக்கின்றார். 'இதோ புறப்படுகின்றார்'; 'இல்லை நாளை கண்டிப்பாக விமானமேறுவார்'; 'ஞாயிற்றுக்கிழமை கொழும்புவந்து சேருவார்' என்றெல்லாம் இலங்கைத் தினசரிகள் சேர் ஒலிவர் இலங்கை திரும்புவதையிட்டு ஓலமிட்டன. கடந்த வாரம் ஒருநாள் உண்மையாகவே சேர் ஒலிவர் பிறந்த நாட்டை நினைத்துப் புறப்பட்டு வந்தார். இவர் இலங்கையில் இல்லாத காலத்தில் இவருடைய 'வீட்டு விஷயங்கள்' பற்றிப் பற்பலவிதமான கதைகளும் வதந்திகளும நாட்டில் நிலவிவந்தன. "இத்தனையும் உண்மைதானே" என்று பத்திரிகை நிருபர் ஒருவர் அவரைக் கேட்டபோது தோளைக் குலுக்கிக்கொண்டு, "யார்சொன்னது; அதெல்லாம் சுத்த அபத்தம். நான் தன்னந் தனியாக வந்திருக்கிறேன். எனக்கு லண்டனில் மூச்சுவிடவேநேரமில்லை. இந்த அழகில் பெண் ஒன்றுக்குப் பின்னுலே திரிய எனக்கு எங்கே நேரம்!" என அழுத்தந் திருத்தமாகக் கூறியிருக்கின்றார். இலங்கையில் புதிய பார்லிமென்டைத் திறந்துவைப்பதற்கு அரச குடும்பத்தினர் வருவார்களோ வெனக் கேட்டதற்கு "இதைப் பற்றிப் பின்னர் தெரிவிக்கப்படும்" எனப் பதிலளித்தார்.

### அது என்ன?

"ஏதோ ஒன்று" கொண்டு வந்திருப்பதாகச்சொன்னுர், அந்த 'ஏதோ ஒன்ற' யாதென்பது இப்போது தெரிந்துவிட்டது. அது தான் ரப்பர் பற்றிய சங்கதி. புதன்கிழமை மாலை நிகழ்ந்த பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் சேர் ஒலிவர் பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்.

"1947-ம் ஆண்டு ஜனவரி முதலாந்திகதியிலிருந்து ரப்பருக்குக் கட்டுப்பாடில்லாத ஏல விற்பனை இருந்துவரும். இலங்கை அரசாங்கம் இனிமேல் இங்கிலாந்திலுள்ள வர்த்தக சபைக்கோ அன்றேல் சர்வதேசக் 'கோட்டா'வுக்கோ ரப்பர் வாங்கமாட்டாது. நவம்பர் டிசம்பர் மாதங்களில் வர்த்தகசபை ஒரு ஷிலிங் இரண்டு பென்ஸாக இலங்கை ரப்பரைப் பெறும். வர்த்தகசபை வாங்கும் தொகைபோகக் குறிக்கப்பட்ட மேற்றிசை நாடுகளுக்கு ஒரு குறித்த தொகை (ரப்பர்), ரப்பர்ஏற்றுமதி செய்பவரால் அனுப்பப்படலாம்."

கப்பற் போக்குவரத்து வசதிகள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் வேண்டிய உதவிசெய்யுமெனத் தெரிகிறது.

### தேயிலை, ரப்பர்

தேயிலை, ரப்பர், தென்னம் பொருள் உற்பத்தி என்பவற்றின் எதிர்கால வியாபாரம்பற்றி, சேர் ஒலிவர் லண்டனிற் பேச்சு வார்த்தை நிகழ்த்தியிருக்கின்றார்.

இவ்வாண்டு டிசம்பர் 31-ந் திகதியுடன் உணவு மந்திரியோடு ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் முடிவடைகின்றது. அதன்பின்னர் இலங்கைத் தேயிலை மொத்தமாக விற்கப்படமாட்டாது. இது மந்திரி சபையின் தீர்மானம்.

### கலாசார மகாநாடு

நேசதேசங்களின் கலாசார மகாநாடு இம்மாதம் 18-ந் திகதி பரிஸ் நகரத்தில் நிகழும். இம் மகாநாட்டுக்குப் பிரதம உதவி வித்தியாகர்த்தர்களில் ஒருவரான ஸ்ரீ ஜயசூரியா இலங்கைப் பிரதிநிதியாக விஜயம் செய்கின்றார். கல்வி, விஞ்ஞானம், கலாசாரம் போன்ற துறைகளில் நல்லஞானம் படைத்தவர்கள் மகாநாட்டுக்குச் செல்லும் பிரித்தானிய தூதுக்கோஷ்டியிலிருப்பவர்கள் எனத் தெரிகின்றது. இத் தூதுக்கோஷ்டியின் ஆலோசகர்களுள் ஒருவராக ஸ்ரீ ஜயசூரியா கடமையாற்றுவார் என அறியக் கிடக்கின்றது. கலைவளர்ச்சிக்குச் சகல நாடுகளும் ஒன்றுகூடி ஒத்துழைப்பதே பரிஸ்நகரிற் கூடும் மகாநாட்டின் முக்கிய நோக்கம்.

### அரசாங்க வைத்தியசாலை

கொழும்பு பெரிய ஆஸ்பத்திரியில் இட நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது. இதுகாரணமாக நோயாளர்கள் 'விருந்தை'களிற் படுத்துறங்குகின்றனர். 1,700 நோயாளிகளுக்குப் பொதுவில் அங்கு 1,000 கட்டில்களேயிருக்கின்றனவாம். இடமில்லாத காரணத்தால் காசநோயினர் 'விருந்தை'களில் விடப்பட்டிருக்கின்றனர். இவர்களுக்கு அருகாமையிலுள்ள அறைகளில் வேறு நோய்களாற் பீடிக்கப்பட்டவர்களுமிருக்கின்றனர். போதிய கட்டில்கள் இல்லாத காரணத்தாற் பெண்கள் குழந்தைகளின் கட்டில்களை உபயோகின்றனர். அக்கட்டில்கள் சிறியனவாகையால் அவற்றின் கம்பிகளுக்கிடையே கால்களைச் செலுத்தித் தொங்கவிட்டுக்கொண்டு அநேக காசரோக ஸ்திரீகள் படுக்கின்றனர்.

இராணுவத்தினர் வெகு விரைவிற் கட்டடங்கள் அமைப்பதுபோல் அரசாங்கம் வேண்டிய கட்டடங்களை அமைக்க முடியாத நிலையில் இருப்பதாக வைத்திய—சுகாதாரப் பகுதித் தலைவர் டொக்டர் செல்லப்பா பத்திரிகை நிருபர் ஒருவருக்குக் கூறினுர்.

### கட்சிகள் ஆரவாரம்

ஸ்ரீசேனநாயகாவின் ஐக்கிய தேசியக் கட்சி (யூ. என். பி.) நாட்டின் பல பாகங்களிலும் பலந் தேடுவதற்காக முயற்சிக்கின்றது. இதுகாரணமாகப் பிரசாரங்கள் மும்முரமாக நடத்துவதற்குத் திட்டங்கள் போடப்படுகின்றன. பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் செய்யப்போகின்றனர் என 'லங்கா சுயராட்சியக் கட்சி'யைச் சேர்ந்த ஒருவர் தெரிவிக்கின்றார்.

'யூ. என். பி.' கட்சித் தேர்தல்களில் ஈடுபடுவதற்காகப் பத்து இலட்சம் ரூபாய் சேர்க்க முற்பட்டிருக்கின்றது. இதுவரை ஒரு லட்சம் சேர்த்தாயிற்றாம். காலிப் பிரதிநிதி ஸ்ரீ அமரசூரியா ரூ 2000 மேற்படி நிதிக்கு உதவியிருக்கின்றார்.

லங்கா சுயராட்சியக்கட்சி, ஐக்கிய தேசியக்கட்சிக்கு முழு மாறானது. ஸ்ரீ. சேனநாயகாவின் ஏகாதிபத்தியத் திமிரையும் இடதுசாரிகளின் பலாத்காரங்களையும் இக்கட்சி நன்ருகக் கண்டிக்கின்றது. சுயநலவாதிகளை நாட்டினின்றும் ஒதுக்கிவிட்டு மக்களின் ஆட்சிக்கு வழிதேட இக்கட்சி முயற்சிக்கின்றது.

### அரசாங்கசபை இறுதிகாலம்

புதிய பார்லிமென்டுக்கான பொதுத்தேர்தல் அடுத்தவருடம் ஜூன் மாதம் நிகழும். ஆகவே, பார்லிமென்டின் முதற்கூட்டம் ஜூலாய் மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகலாம். இப்போதுள்ள அரசாங்கசபை மார்ச் மாதத்துடன் சுருட்டிக்கட்டப்படுமென அறியக்கிடக்கின்றது. முதற் கூட்டத்தில் தலைவர் தெரிவு நிகழலாம். இராசகுடும்பம் இவ்வைபவத்திற் பங்குபற்ற முடியாதவிடத்தும் அவர்களின் ஒரு பிரதிநிதி விஜயம் செய்வார் என அறிகின்றேன். 1947–48-ம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டம் சமர்ப்பிப்பதாகில் புதிய பார்லிமென்ட் அடுத்த ஜூலாய் மாதம் கூடுவது அவசியமாகின்றது.

### அரசியற் கைதிகள்

அரசியற் குற்றத்துக்காகத் தண்டனைபெற்றுச் சிறைபுகுந்தவர்களிற் சிலர் புதிய பார்லிமென்ட் பொதுத் தேர்தலிற் பங்குபற்றமுடியாது. இதுசம்பந்தமான பகுதியை அரசாங்கசபைப் பிரமாணத்திற் திருத்தப்பட வேண்டுமென லண்டன் பொதுமக்கள் சபையில் தொழிற்பிரதிநிதி ஒருவர் கேட்ட கேள்விக்குக் குடியேற்றநாட்டு மந்திரி "அது முடியாது" என விடையிறுத்திருக்கின்றார். ஆனுல் பொதுமக்கள் தேசாதிபதிக்கு விண்ணப்பஞ்செய்தால் தேசாதிபதி குறித்த விண்ணப்பத்தின் தகைமையைச் சீர்தூக்கிப்பார்த்து ஒருவேளை அரசியற்கைதிகளை அவர் மன்னிக்கக்கூடுமெனவும் குடியேற்றநாட்டு மந்திரி தெரிவித்தார்.

புதிய பார்லிமென்ட் மூலம் இலங்கை மக்களிடம் நாட்டின் சகல நிர்வாகப் பொறுப்பையும் அளித்திருப்பதாக மன்னர்பிரான் மகா மந்திரிசபைக் கூட்டமொன்றில் வாழ்த்துப் பா பாடியிருக்கின்ருர். இது இலங்கை மக்களின் பெரிய வெற்றியெனக்கூறி அவர் இலங்கை மக்களைப் பாராட்டுகின்ருர்.

# ருஷியாவில் இலட்சாதிபதிகள்

## கலைஞர் பெறும் பணம்

ருஷியா பொதுவுடைமை நாடாக இருப்பதனுல், அங்கே பணக்காரர்கள் இல்லை என்றும், வருமானம் எல்லாருக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறதென்றும் நினைக்கிருர்கள். இது தவறு. சாதாரணக் கூலிப்பணம் பெற்று அநேகர் அங்கே உயிர் வாழ்கிருர்கள். பத்துஇலட்சக் கணக்கில் வருமானம் பெறும் அநேகரும் ருஷியாவில் இருக்கிருர்கள். யுத்தத்துக்கு முன்பு மொஸ்கோவில் மட்டும் சுமார் 30 இலட்சாதிபதிகள் இருந்தார்கள் என்று தெரிந்தது.

யுத்தத்துக்கு முன்பு ருஷியாவிலிருந்த எல்லோரிலும் அலிக்ஸி டோல்ஸ்டோய் என்ற நாவலாசிரியர் மிகப்பெரிய பணக்காரராக இருந்தார். ருஷியாவில் அரசுபுரிந்துவந்த பீட்டர் என்பவரைப் பற்றி நாவல் எழுதி அவர் உலகப் பிரசித்தி பெற்றுர். இதை சினிமாப்படம் பிடிப்பதற்காகமட்டும் இவருக்கு 30 இலட்சம் ரூபிள்களை ருஷிய அரசாங்கம் [illegible] சுமார் 13 [illegible] அவருடைய புத்தகங்கள் கோடிக்கணக்கில் விற்பனையாயின; அத்துடன் அவருக்கு இரண்டு மூன்று தடவைகளில் 'ஸ்டாலின் பரிசு" அளிக்கப்பட்டது.

ஒவ்வொரு தடவையும் அந்தப் பரிசின் மதிப்பாகிய 2 இலட்சம் ரூபிள்கள் அவருக்குக் கிடைத்தன. இந்த ருஷியக் கோடீசுவரருக்கு லெனின்கிராட், மொஸ்கோ, கிரிமியா, கோகஸஸ் ஆகிய இடங்களில் வீடுகளும் 'மோட்டார்க்கார்' களும் இருந்தன. வேலைக்காரர்களும் இருந்தார்கள். அவர் வைக்கும் விருந்துகள் ருஷியா முழுவதும் பிரசித்தி பெற்றிருந்தன. இவர் மகான் லியோ டோல்ஸ்டோயின் மருமகன். கொஞ்சக் காலத்துக்கு முன்பு அலிக்ஸி டோல்ஸ்டோய் காலஞ்சென்றுர்.

ருஷியாவிலுள்ள மற்றொரு எழுத்தாளர் இலட்சாதிபதியாக விளங்குகிருர்.

'டான்நதி அமைதியாக ஓடுகிறது' என்ற நாவலை எழுதிய ஆசிரியர் மைக்கேல் ஷோலோகோவ் பெரும் செல்வந்தர். மேற்கூறிய நாவல் ருஷியாவில் மட்டும் ஒருகோடி பிரதிகள் விற்றிருக்கின்றன. அதனுடைய மொழிபெயர்ப்புகள் இந்தக்கணக்கில் சேர்க்கப்படவில்லை. அலிக்ஸி டோல்ஸ்டோய் இருந்ததைப் போல அல்லாமல், ஷோலோகோவ் மிகவும் எளிய வாழ்க்கை நடத்துகிருர். தம்முடைய கிராமத்திலேயே அவர் பெரும்பாலும் வசித்து வருகிருர்.

கதாசிரியர்களை விட்டு விடுவோம். சினிமாத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும், நடிகர்களும் ருஷியாவில் ஏராளமாக சம்பாதிக்கின்றனர். உதாரணமாக ஈஸ்டின், புடோவ்கின் ஆகியவர்களைக் கூறலாம். பிரபல பாடகரான காஸ்லோவஸ்கி ஒரு கச்சேரிக்கு 15000 ரூபிள்கள் வரையில் வாங்கிவருகிருர். ஒருதடவை அவருடைய வருமானம்பற்றி பிராவ்டா பத்திரிகை கண்டனம் செய்தது. அப்புறம் பலநாட்களுக்கு அவர் பாடுவதற்கு முன்வரவில்லை. கடைசியில் அவர் கேட்ட பணத்தை அரசாங்கம கொடுக்க வேண்டியதாயிற்று. ஏனெனில் அவரைப்போன்ற குரலுள்ளவர்கள் வேறு ஒருவரும் கிடைக்கவில்லை.

1934-ம் வருஷத்திற்குப் பிறகு "தொழிற்சாலைத் தலைவர்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர் ஒரு 'கிளாக்கர்'

'கசின்'

"இந்த வேட்டி மிகவும் நன்றாயிருக்கிறதே; இப்படியான முதல் 'நம்பர்' சாமான்கள் உங்களிடம் எப்படிவந்தசிக்குகிறது;" என்றால் கிளாக்கரையாவுக்கு உச்சிகுளிர்ந்துவிடும். அதிலேசிறிது நேரம் லயித்துத் தனது பொருள்களைப் பற்றிப் பிரஸ்தாபித்துவிட்டு ஒரு ஒய்யார நடையுடன் அப்பாற் செல்லுவார்.

வேண்டுமென்றே தன்னை மற்றவன் புகழ்கிருன் என்பது இவருக்குச் சிறிதும் புரிவதில்லை. இவரை யொருவர் புகழப்புகழ இவரும் சேர்ந்து தன்னைப் புகழ்வாரேயன்றி, அதற்காக நாணமாட்டார்.

ஒரு சமயம் பிறர் உணர்த்தியாவது, புகழ்கிறவனுடைய வாய்ப்பாட்டுப்பிழையினலாவது, வஞ்சகப் புகழ்ச்சியென்று அறிந்தாராஞல் இவருக்குப் பிரமாத கோபம் மூக்கு நுனியில் வந்து நிற்கும். அக்கோபம் ஏற்படும் பொழுதுபெரியதடல்புடலாகவேயிருக்கும். ஆனல் என்ன ரீதியில் ஏறினதோ அதே ரீதியில் இறங்கிவிடும். ஆகவே இவருடைய கோபத்திற்கு அஞ்சுபவர் மிகச் சிலரே.

நீண்ட காற்சட்டை, மேற்சட்டை, தொப்பி சகிதமாகவே அதிகமாக விளங்குவார். இவைகளெல்லாம் புத்தம் புதிதாக, வண்ணான் மடிப்புக் குலையாதவைகளாகவே அதிகமாக இருக்கும். நடந்துபோவது வருவதில் ஒரு தளுக்கு. சம்பாஷணைத் தொடக்கமும் முடிவும் ஒரு இராகம். எங்கேயாவது சம்பாஷிக்கிருர் என்ருல் அது இவருடைய தற்புகழ்ச்சிப் படலமேயென்று அதனைக் கேட்காமலேசொல்லிவிடலாம். தற்புகழ்ச்சிப் படலமேயன்றி வேறு எதுவும் பேசத் தெரியாது. வேறு கதைகள் பேசினல் மிக விரைவில் சலிப்பேற்பட்டு, 'அலுவல் இருக்கிறது!' என்று சொல்லி ஆளை அனுப்பிவிடுவார்.

சில மனிதர்களுக்கு மற்றவர்களை வேண்டுமென்று வைத்துப் புகழுவது தெரியாது. அப்படிப் புகழுவதற்கு ஒரு சிலருக்கு நாணம். அப்படி நாணமுடையவர்கள் இவருக்குப் பகைவர்கள். இப்படிப்பட்ட பகைவர்களிற் சிலர் இவரிடம் நட்பாயிருக்க என்னமாதிரிப் பழகிக்கொள்ளவேண்டுமென்று இன்னும் ஆராய்ச்சிசெய்கின்ருர்கள்.

இவருடைய தற்புகழ்ச்சிப் படலத்தைக் கேட்கத் தலையிடி ஏற்பட்ட சிலர் இவரை வேண்டுமென்றே பகைத்துக்கொண்டே திரிகிருர்கள். இப்படிப் பகைத்துக்கொண்டவர்களை அடிக்கடி உதாரணத்தில் வைத்துப் பேசுவார். உதாரணமாக: 'உங்கள் வேட்டி மிகவும் நன்ருயிருக்கிறதே' என்று ஒருவர் சொன்ஞல் அருணுசலத்தின் (இவரின் பகையைப் பெற்றுக்கெண்டவர்.) வேட்டிக்கு இவைகள் வருமா? என்று குத்தலாகக் கூறுவார். சொன்னவர் புத்திசாலியாகவிருந்தால் 'அருணுசலமாவது. வேட்டியாவது, அவன் ஏந்த ஆண்டிலேயா வேட்டியைக் கண்டவன்.' என்றிப்படிக் கூற வேண்டும். அப்படிக் கூறுவான் என்றுதான் இவர் அருணுசலத்தை உயர்த்திக் கூறியது.

ஊரிலுள்ள வயது சென்ற பெண்களைக் கண்டால் (தேடிச் சந்தித்தாவது) அன்பாகச் சுகம் விசாரிப்பார். இப்படி ஒரு காற்சட்டைக்காரன் தங்களில் அன்பாயிருக்கிருன் என்ருல் கிழவிகளுக்கு விழுந்த பல் முளையாதா? 'பசுப்போல அந்தப் பொடியன். அவன்தான் பொடியன். தனக்குப் பெரிய உத்தியோகம் என்ற பெருமையோ, அகம்பாவமோ ஒன்றுங் கிடையாது. மிதித்த இடத்துப் புல்லுச் சாகாத பசுபதி' என்று அவரை வாயாரப் புகழ்ந்து திரிவார்கள். அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டவர் மாதிரிக் காட்டிக்கொள்ளாவிட்டாலும், அவருடைய நெஞ்சு பூரித்து விடும்.

ஏழைகள், கமக்காரர், தொழிலாளர் இவர்களைத் தெருக்களில் கண்டால், மறித்து, அவர்களை அவர்கள் சுற்றத்தவர் போல் சுகம், தொழிற் பெறு பேறு, குடும்ப நிலைமை, ஆதிய விசாரித்து ஆறுதல் கூறி, அத்தோடு தன் வீரப் பிரதாபத்திலும் இரண்டு மெதுவாக வெளியிட்டு, அவர்கள் கேட்கும் சண்டைப் புதினக் கேளவிகளுக்கும் சுருக்கமான விடையளித்துச் செல்வார். இதில் இன்னெரு வேடிக்கையுண்டு. சாதாரணமானவர்களோடு இவர் பேசும் பொழுது இவரைக் களிப்புடன் செல்ல விடமாட்டார்கள். இவர் அவ்விடத்தால் கழருவதற்குச் செய்யும் பிரயத்தனங்களைப் பார்த்தாற் பெரிதும் பரிதாபமாக இருக்கும். இறுதியில் ஏதும் ஒரு பெருத்த சிரிப்பைச் சாக்காகக் கொண்டு அவ்விடத்தைவிட்டு நழுவுவார்.

ரயிலிலும், பஸ்வண்டியிலும் பிரயாணம் செய்யும்போது தேசிய விநாயகம்பிள்ளையின் பாடல் ஒன்றைப் படிப்பார். அடுக்க ஆங்கிலப்பாட்டுப்படிப்பார். முடிவில் சிங்களப்பாட்டும் படித்துவிடுவார். கேட்பார் ஒருவருமின்றியிருந்தாலும் அவைகளைப்பற்றி ஒரு சிறு விமர்சனமும் செய்வார். சட்டைப்பைக்குள் வைத்திருக்கும் அலுமீனியம் சீப்பை எடுத்து அழகாகத் தலை வாருவார்.

இவைகளெல்லாம் இவர் நாள்தோறும் செய்யும் முயற்சிகள். வேறுமுள. விரிக்கிற் பெருகும்.

பொய், களவு, சூது வஞ்சனையில்லாமல், தானும், தன் புகழுமாகத் தற்புகழ்ச்சியை இலட்சியமாகக் கொண்டொழுகும் இவருக்கும் 'பனியர்'? இல்லையேல் பொருமையற்ருன் 'பனி' யென்று சொல்லுகிருர்களா?

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## 44-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

1945 இன் பாதுகாப்புப் பிரமாணங்களின் (புடவைக் கட்டுப்பாடு) 20ம் பிரமாணத்தின்படி எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திஞல் புடவைக் கட்டுப்பாட்டு 7வது கட்டளையிற் பிரசுரித்த அட்டவணையில் பின்வரும் விரைப்புகளையும் (items) சேர்த்துக் கொள்ளுமாறு கட்டளையிடுகிறேம்.

| வரிசை இல. | வகை | வியாபார இல. | அளவு. | ஒரு யாரின் சில்லறைவிலை |
|---|---|---|---|---|
| 138 | சலவைசெய்யப்பட்ட பான்சி ஷேட்டிங் | 3200 | 32" அகலம் | ரூபா 1-15 |
| 139 | சாயமூட்டப்பட்ட ,, | 3200D | 32" ,, | ,, 1-30 |
| 140 | சலவைசெய்யப்பட்ட லினேரெக்ஸ் | 2800 | 28" ,, | ,, -90 |
| 141 | சாயமூட்டப்பட்ட ,, | 2800D | 28" ,, | ,, 1.05 |
| 142 | சலவைசெய்யப்பட்ட கீறுகள் உள்ள பிஜாமா பொப்ளின் | 888 | 28" ,, | ,, 1-50 |
| 143 | காரிக்கன் ஷேட்டிங் | 4600 | 46" ,, | ,, 1-50 |
| 144 | மேற்படி | 4900 | 48" ,, | ,, 1-25 |

கொழும்பு
1946-ம் ஆண்டு ஒக்டோபர் 30ந்திகதி

ச. ஜெரட்னசிங்கம்
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

[2952]


புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிருர்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் பெறமுடியும்.

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சழதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

THE
COLOMBO
COMMERCIAL
COMPANY
LTD.

Incorporated in Great Britain
Liability of Members Ltd.

[2909]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்கூறும் சீர்திருத்தம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அன்றும் நாடி இனிய சொற்களால்தான் உள்ளங் கனியும். மக்களை ஏதோ மூடர், புழுக்கள்; தாமே அறிவாளி அதுவும் தாம் சொல்வது அறிவு, ஆதலின் எப்படியும் சொல்ல உரிமையுண்டெனக் கடுமையாகவும் அவர்களை இழிவாகப் பேசியுங் கூறினால் அதனை உடனே அறிந்தும் எதிர்ப்பர். இனிமையாகக்கூறி எதிர்ப்பு ஏற்படும்போதுங் கூட அவ்வளவுக் கவ்வளவு நம்மிடம் பொறுமை யிருந்தால்தான முடிந்த வெற்றியுண்டு. வீண் ஆத்திரப்படலாகாது. விரைவில் சோர்வும் தோல்வியும் ஏற்படும்.

விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்
நிரந்தினிது சொல்லுதல் வல்லார்ப்பெறின்

என்னும்போது வள்ளுவர் இதனையே கருதுகிறார்.

மக்களுக்குக் கருத்துக்களை எப்படி ஒன்றன்பின் ஒன்றாக முறைப்படுத்திக்கூறினால் மனத்தில் பதிவும் திருத்தமும் ஏற்படும் என ஆராய்ந்து கூறும்போதும் அவர்கள் மகிழும்வகையில் இனிய சொற்களில் கூறவும்வேண்டும். இக்கால மனோதத்துவப்படி கூறவேண்டின் மக்களை ஒரு இளங் குழந்தைகளின் கூட்டமாகக் கருதிக்கொள்ள வேண்டும். சிறிது முகஞ் சுளித்தாலும் தோல்வி பெரிதென உணரவேண்டும்.

இதனையறிந்தோர் ஒரேதடவையில் சிலசொற்களிலேயே ஒரு பெருங்கூட்டத்தை; நாட்டைத் திருப்பி விடுகின்றனர். மற்றவர் அவர்கள் கேளாமை கண்டு எப்படி எப்படியோ அதனையே திருப்பியும், திருத்தியும், பெருக்கியும் சொல்லிப் பார்க்கின்றனர். பயனைக் காணுமல் ஏமாற்றமடைந்து மக்களைத் தாறுமாறாகப் பழிப்பதுடன், அவர்கள் யாரைப் பின்பற்றத் தொடங்குகிறார்களோ அவரையும் தூற்றத் தொடங்குவதன்வழியே தமக்கு வெற்றிகிடைக்குமென மயங்குகின்றனர். அன்றிப் பொறுமையாலும் இருக்கலாம். 'மாசற்ற சிலசொல்லத் தேற்றாத, பலசொல்லக் காமுறும்' நல்லோர் இவராகக் கொள்ளலாமல்லவா? இந்நிலையில் சீர்திருத்தத் தொடங்கிய இவர்கள் அறிவு -அறிஞர் நகைக்கத் தக்கதும், எளியராலும் எதிர்க்கத்தக்கதுமாய்விடுகிறது. பலவகையிற் பொது மக்களின் பல நல்ல முடிபுகளின் முன் இவர்கள் அறிவு தாழ்ந்ததாகிவிடுகின்றது. இதனால்தான் டால்ஸ்டாய் ஓரிடத்தில் 'பெரிய பெரிய அறிஞரை விட ஏழைக் குடியானவன் நீதியையும், உண்மையையும (ஆராய்ந்து; விவாதித்து விளக்கமுடியாதவனுகவிருக்கலாம்) காண்பதில் எவ்வளவோ மேன்மையும் நேர்மையு முடையவனாய் இருக்கிறான்' என்கிறார்.

அளவற்ற பொறுமையில்லாத ஒருவன் சீர்திருத்தம் செய்வது 'கோபக்காரத் தாய் குழந்தையை வளர்ப்பது போல்' ஆகும். பொறுமையால்தான் தன் குற்றமும், விடாமுயற்சியும், துன்பத்தையெதிர்க்கும் ஆற்றலும் பெருகும். இம்மூன்றும் இன்றியமையாதனவாம்.

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு

என்ற அரசர்க்குரிய இயல்பு இவர்கட்கும் பொருந்தும். மக்களைத் திருத்தி நன்னெறி செலுத்துவதில் சீர்திருத்தக்காரன் அரசனுக்குத் துணைவனாய் விடுகிறான். ஏன்! இன்று அரசியல் கட்சிகள்தானே சீர்திருத்தங்களையும் செய்கின்றன! மக்களும், மற்றவரும் சொல்லும் தனது குறைபாடுகள் கடுமையாகத் தன் செவிகளையும் மனத்தையும் தாக்கினாலும் பொறுமையாக ஏற்று ஆராய்ந்து பின்னர் பிழையெனக்கண்டால் அஞ்சாமல், கூசாமல் நாட்டின் நன்மைக்காக விட்டுவிடுவதும், தன்னெறி உண்மையாயின் எதிரியைத் தாக்காமே அதனைத் தெரிவுபட விளக்கி வைத்து அவரை உணரச் செய்வதும சீர்திருத்தக்காரனின் இரண்டு

மு. கோவிந்தசாமி

வலிய 'வெற்றிதரும் படைகள்' எனலாம். அதைவிட்டு, தன்னைப் பின்பற்றுவோரும் எதிரிகளும் 'தோற்றான்' எனப் (விட்டுக் கொடுத்தமைக்கு) பழிப்பாரேயெனவும், உண்மையை ஆத்திரத்துடனும், துடிதுடிப்புடனும் எதிரியை இகழ்ந்து பின் எடுத்துக்காட்டுவதால் தோல்வியும் நாட்டிற்குத் தீமையுமே விளைகின்றன.

எதிரி இடித்துரைப்பதனைப்பொறுத்து ஆனால் உண்மையைமட்டும்விடாமல் கடைப்பிடிக்கும் ஒவ்வொருபொழுதும் முன்னேற்றத்தையும் வெற்றியையும் நோக்கி ஒருபடி முன்னெடுத்து வைத்தோராவோம். இதனால்,

இடிக்குந் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்

என்ற உண்மையுடன் முரண்படுகிறேமென்பதல்ல. இனிமையாய், பொறுமையாய் நடத்தல் இடித்து மக்களைத் திருத்துவதினின்றும் மாறுபட்டதல்லவாம். விடாது வற்புறுத்துவதும், அதன் உண்மையையறியும் முயற்சியில் அவர்களுடைய உள்ளம் நொந்தாலும் அதனைப் பாராது அவர்களைச் செயலில் ஈடுபடுத்துவதுமே 'இடித்துரைத்தல்' ஆகும். இவ்வியல்பே 'பெர்னாட்ஷா' போன்ற அறிஞரின் சிறப்பியல்பாகும். மக்கள் நடைமுறையில் உறும் துன்பம் எதிர்ப்புக்கு அஞ்சாமல் உண்மையை விட்டுவிடாமலோ, இளக்கிக்கொடுக்காமலோ இருத்தலே அதுவாகும். முடிவில் மக்கள் இதன் பயனில் மேன்மையையும், அறிஞரிடம் உரிமைப்பற்று இவற்றையும் கண்டு மனமகிழ்வார்கள். தாம் பின் கூறும் கொள்கைகள் எளிதாய்ப் பதிவதற்குரியவழியை இத்தன்மை சீர்ப்படுத்திவைக்கின்றது. 'அழச்சொல்லி அல்ல திடித்துத் திருத்தும்' உண்மை, மக்களின் நண்பர் இவர்கள்தான்.

இன்று பட்டணங்களில் உள்ள அறிஞரைவிட மிகுதியான கிராம மக்களே 'திருந்த வேண்டியவர்கள். நகரமக்கள் பிழையை உணர்ந்தும் திருத்திக்கொள்ளாமல் வாழ்பவர். கிராமம் அப்படியல்ல. மூடப் பழக்கமாய் நம்பி விடாப்பிடியாயுள்ளோர். ஆகவே உண்மையான திருத்தஞ் செய்வோர் கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும் பெரும்பான்மையான தாழ்ந்தவர்களிடம் கருத்தைச் செலுத்தவேண்டும். அவர்கள் திருத்தமே நகரங்களை எளிதில் மாற்றிவிடும். சமூகத்திலுள்ள அடிப்படையான குறைபாடுகள் (குடி, சூது, சுகாதாரக் கேடு, கடன் சுமை, தீண்டாமை, கடவுள் கொள்கையில் மூட நம்பிக்கைகள்) எல்லோருக்கும் பொதுவானவை. இவற்றில் அரசியற் கட்சிப் பிணக்கை இணைக்கும்போது தான் தீமை விளைகிறது. இந்தக் குறைபாடுகளை நீக்கும்வகையில் யாவரும் ஒத்துழைப்பதன் மூலம் நாட்டிற்கு எவ்வளவோ நன்மையும், புகழும் விளையும். அதைவிட்டு கட்சிப் பூசலால் பொதுவாகவுள்ள மக்கள் துன்பமும், இரண்டுங் கெட்டான் நிலையும் அடைந்து குழப்பமடைகின்றனர். சிலர் அறிஞரைத் திருத்திவிட்டால் அவர்கள் ஏழைகளிடம் பழகும்போது ஏழைகள் திருந்திவிடுவர் என, 'பெரிய நகரங்களில் கூட்டம்போட்டுப் பேசுவதையே பெரிய சீர்திருத்தமாகக் கருதிவிடு கின்றனர். யாரைச் சீர்திருத்த விரும்புகிறோமோ அவர்களிடம் நேரே செல்லாதவரையில் உண்மைச் சீர்திருத்தம்நடைபெறாது அத்துடன் நமக்கு எதிர்ப்பட்ட கொள்கைகளும் எளிதில்பரவ வழியாய்விடும். என்றும் அறிஞரைத் திருத்துவதென்பது அவரைபொத்தவரால் முடியாது. அதனால் பிடிவாதமும் பிழையில்மேலும் நம்பிக்கையுமே பெரும்பாலும் வளரும். தனக்குமேம்பட்டோர் சொல், நூல்இவற்றைக் கண்டு தாமே திருந்துவதே சிறிது அறிவு பெற்றவரின், பொதுமக்களினும் இழிந்த, ஓர் இயல்பாகும. தன்னையொத்தவன் கூறும் உண்மைகளையும் ஆராய்ந்து ஏற்பதால் அவன் தன்னினும் உயர்ந்தவனாய்விடுகிறான், இழிவாய் நினைப்பான் என்பதற்காகவே நாம் கூறுவதனை வெளியிலேனும் மறுத்தும், குறைந்தது! நடுநிலைமையாகவும் இருக்கவே முற்படுவர் ஆதலின் கிராம ஏழைகளை நேரே அவரிடம் செல்வதன் மூலமே மேம்படுத்த முடியும். (இங்கு தம்மையொத்த அறிஞர் என்கையில் எதிர்க்கட்சியைச் சார்ந்தோர்).

இத்தகைய சீர்திருத்தத்தினை உலகிலும், சிறப்பாக நம் நாட்டிலும் முற்காலத்தே மொழிப்புலவரும், துறவிகளும் (ஞானி) செய்துவந்தனர். நம் நாட்டில் இடைக்காலத்தே சமணபுத்தரும், பின் சமயக் குரவரும், இன்று அரசியல் கட்சிகளும் செய்துவருகின்றனர். பொதுவாக இவர் வாழ்விலிருந்து நாம் அறிவது சீர்திருத்தம் சொல்லினால்மட்டும் அல்ல, அவற்றை உண்மை வாழ்வாகத்தாமே நடத்திக் காட்டுவதன் வழியே ஆகும்

((தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# வீறுடையாள் பாரதத்தாய்

நவநீத கிருஷ்ண பாரதி

வீட்டகத்துப் பூனைநாய் மேவினிலை யாடல்கண்டேன்
நாட்டகத்தார் ஒன்றுபடல் நான்காணேன்—பாட்டகத்து
மற்றிதனைச் சின்னு மனங்காணும் போதே
பெற்றுவிடும் பாரதநற் பேறு.

பாரததே யத்தைப் பல்துண்டு செய்துதம்முள்
போரெதிர்ந்து கெட்டகதை போதாதோ—நேரெழுந்து
பாகித்தான் வேண்டப் பதறிவரும் சின்னுநீ
ஆகத்தான் தாழ்த்தா தமை.

நாடுநகர் எல்லாம் நரகக் கொலைக்களமா
காடையர்போர் வீரர்களாக் காட்டியதே—பாடுஅறியா
மோகத்தால் அற்புக்கண் மூடியருள் கொல்சின்னு
பாகித்தான் கேட்கும் பரிசு.

எல்லாச் சமயமும்இங் கொன்றுய்க் கூடுகையில்
அல்லாச் சமயத்திற் காபத்தேன்—நல்லாய்கேள்
என்றால் இயம்பற் கியலாது நேரகிச்
சின்னுவைக் கேட்டுத் தெளி.

பாரதமும் இன்றெழுந்து பார்அறியத் தன்கோலை
நேருவள்ளல் வாயால் நிறுத்தியதால்—யாரினிமேல்
பேயாக மாறிப் பிதற்றிலென்னும் கன்றிகெட்ட
நாயாக் குரைக்கிலென்னும் காடு.

வேறுபடக் கூறுசெய்தும் வேறுபடா வீறுடையாள்
ஊறுபட்டும் தற்காக்கும் ஒண்மக்கள்—பேறுபெற்றுள்
பாரதமா தேவியுடன் பல்லாண்டு வாழியரோ
நேருஅருட் காந்தீயம் நேர்ந்து.

விற்றாலும் கொண்டாலும் வென்றாலும் தோற்றாலும்
எத்தாலும் போகா தெனஉணர்வீர்—முத்தான
நாற்பது கோடிக்கும் நம்பா ரதநாட்டின்
சாற்றும் பிறப்புரிமை தான்.

# இராமாயணத்தின் சுவை

K. S. கிருஷ்ணன்

சிருங்காரம், வீரம், கருணை முதலிய ஒன்பது சுவைகளும் இராமாயணத்தில் விரவியிருப்பினும், கருணைரஸமே இந் நூலினது அடிப்படையான சுவை என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். இராமாயண முன்னுரையில் 'சோகமே சுலோகமாக ஆனது' என்ற வாக்கியம் அக்கூற்றை வலுக்கச் செய்கின்றது. 'இதிஹாஸசிரேஷ்டமான இராமாயணத்தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது' என்று வைணவ சித்தாந்த நூல்கள் கூறின. இராமாயண முன்னுரையில் 'இந்நூல் சீதையினுடைய உயரிய சரிதம்' என்று கூறப்பட்டுள்ளது. சீதையின் சரிதம் கருணை ரஸத்தையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

இராமாயணத்தை 'மகாவீர சரிதம், உத்தர ராமசரிதம்' என இரண்டு நாடகங்களாகச் செய்த பவபூதி என்ற புலவர், 'கருணைச் சுவையே சுவை. மற்றவையெல்லாம் கருணையின் வேறுபாடுகளே. எவ்வாறு தண்ணீரொன்றே சுழியென்றும் அலையென்றும் குமிழியென்றும் வேறுவேறு பெயர்களைப்பெறுகின்றதோ, அவ்வாறே கருணையே பல பெயர்களையடைகின்றது' என்கிறார்.

இராமாயணத்தின் கதைப் போக்கை நோக்கும்போது ஒவ்வொரு முக்கிய கட்டத்திலும் கருணை ரஸமே மேலிட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது. பொன்னும், புகழும், மற்றுமெல்லாமிருந்தும் தசரதனுக்கு மக்கள் இல்லையென்று கவி கூறி, படிப்போரின் மனதை இரங்கச்செய்கிறார். பிறகு, புத்திரர்கள் பிறந்து மகிழ்ந்திருக்கும் நாளில், ஒருகணமும் பிரிந்தறியாத தசரதனிடமிருந்து இராமனைப் பிரித்து விசுவாமித்திரன் கூட்டிச்செல்லும்போது படிப்பவருக்குத் தசரதன் பக்கல் இரக்கமேற்படுகின்றது மணக்கோலத்துடன் அயோத்திக்குத் திரும்பிவரும் இராமனை பரசுராமன் எதிர்த்தபொழுது தசரதன் [illegible] பரசு[illegible] கேட்டுத்தான் மீண்டும் உயிர்க்கிறான். அயோத்திக்கு வந்தபிறகு, கதையின்போக்கு ஒரே துயரமாக இருக்கிறது. இராமன் வனம்புகுதல், தசரதன் மரணம், பரதன் துறவு எல்லாம் சோகத்திற்கு மேலே சோகம். தண்டகாரணியத்தில் இராவணன் சீதையைப் பிரித்ததிலிருந்து, இராமன், சீதை இவர்களின் பரிதாபநிலை, வாலிவதம், அசோகவனத்தில் அனுமன் சீதையைக்கண்டது, இராவணவதம், விபீஷணன், மந்தோதரி இவர்களது துயரம் எல்லாம் கருணை ரஸத்தையே பிரதானமாகக் கொண்டுள்ளன. இவைகள்தான் கதையின் முக்கிய பாகங்கள். அழகானபாகங்களும்இவையே.

இராமாயணம் வீரரஸத்தை முக்கியமான சுவையாகக் கொண்டநூல் என்று கூறவும் இடமுண்டு. கதாநாயகனாகிற இராமன், பக்கத்துணையான இலக்குவன், தூதனும் அன்பனுமான அனுமன், நண்பனும் வானர மன்னனுமான சுக்கிரீவன் முதலான எல்லோரும், தங்களுக்கு நேர்ந்த துயரங்கள், இடையூறுகள் எல்லாவற்றையும் மனோபலத்தினாலும், தேகவலிமையினாலும் வென்று தங்களது வீரத்தை நிலைநாட்டியுள்ளார்கள். கோசலை, சுமித்திரை, சீதை போன்ற வீரபத்தினிகள் தங்களுக்குநேர்ந்த ஆற்றொணாத் துயரங்களைச் சகிக்கும் ஆற்றல் பெற்றவராயிருந்தனர். வாலி, இராவணன், கரன், இந்திரஜித்தன், கும்பகர்ணன் முதலாயினோர், வீரவாழ்வை வாழ்ந்து வீரர்களாகவே மடிந்தனர்.

வீரரஸம் இவ்வாறு முக்கியச் சுவையாகத் தோன்றினும், துயரங்கள் ஒன்றின்பின் ஒன்றாக வந்து இச்சிறந்த வீரரிற் பலரையும் வாட்டியதால் கருணை ரஸமே இராமாயணத்தின் சுவை என்று நினைப்பதற்குக் காரணம் உண்டு.

இனி, இந்நூலில் இடம்பெற்றிருக்கும் சிருங்காரரஸம் அல்லது இன்பச்சுவையை நோக்குமிடத்தும் கருணை ரஸத்தையே இந்நூல் அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பது தெளிவாகின்றது. இராமாயணத்தில் 'பிரிவு' என்ற இன்பச்சுவையே அதிகம் கூறப்பட்டிருக்கிறது. பிரிவிலே, துயரமும், இரங்கலும், ஏங்குதலும் ஏற்படுமாகையால், கருணை ரஸமே இராமாயணத்தின் சுவையென்பது விளங்குகிறது.

# பிரதம உதவி வித்தியாகர்த்தர்

## ஸ்ரீ க. ச. அருள்நந்தி நியமனம்

கொழும்பு அரசினர் ஆங்கில ஆசிரியர் கல்லூரி அதிபர் ஸ்ரீ க. ச. அருள்நந்தி அவர்கள் பிரதம உதவி வித்தியாகர்த்தராக நியமிக்கப்பெற்றுள்ளார்கள்.

கல்வியிற் சிறந்த ஸ்ரீ அருள்நந்தி அவர்கள் யாழ்ப்பாணத்திற் பிறந்து வளர்ந்தவர்கள். கல்லூரிகளிற் பயிலுங்காலத்தும் தீவிர புத்திவாய்ந்த விவேகியாகவிருந்தவர்கள். லண்டன் சர்வகலாசாலை விஞ்ஞானப் பண்டிதப் பட்டம் [B. Sc.] முதற் பிரிவிற் பெற்ற சிலருள் இவர் ஒருவர்.

கல்லூரிகளில் விஞ்ஞான சாஸ்திர ஆசிரியராகவிருந்து பின்னர் உப வித்தியாதரிசியாகி இங்கிலாந்துக்குச் சென்று M. SC. பட்டம் பெற்றவர். பெரும்பாக வித்தியாதரிசியாகக் கடமையாற்றியபின் உதவி வித்தியாகர்த்தராயினர். இதன்பின்னதாக அரசினர் ஆங்கில ஆசிரியர் கலாசாலைத் தலைமைப் பேராசிரியராக விளங்கினர்.

ஸ்ரீ அருள்நந்தி அவர்கள் தமிழ்ப் புலமையும் வாய்ந்தவர். தமிழ்க் கவித்துவத்தைச் சுவைக்கும் ஆற்றல் மிகுந்தவர். பிள்ளைப்பாட்டு என்னும் நூலை ஆக்குவித்தோர் இவரே யாவர். தாய்மொழி வாயிலாகக் கல்வி பயிற்றும் இக்காலத்தில் இருமொழி வன்மையும், விஞ்ஞான அறிவும், கல்வித்துறையிற் பழுத்த அனுபவமும் வாய்ந்த ஒருவர் இப்பதவியை வகித்தல் சாலப்பொருத்தமுடையதே.

இப்பெரியாரின் தொண்டினைத் தமிழ் உலகு கண்டு இன்புறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: விய, ஐப்பசி உடு

## மது நீக்கம்

மதுபானமே எல்லாத் தீமைகட்கும் பாபங்கட்கும் ஆதிகாரணமென்பது எவரும் அறிவர். இக்காரணத்தால் இதனை முற்றுக ஒழித்துவிட வேண்டுமென்ற நோக்கம் எந்நாட்டவர்க்கும் எச்சாதியர்க்கும் உண்டு. ஆனுல், அனுட்டானத்தில் இதைச் செய்து முடிப்பதென்பது இலகுவாக இருக்கவில்லை. இற்றைக்கு இருபது வருடங்கட்குமுன் மதுபானஞ் செய்வோர் தொகை இலங்கையில் மிகச் சிறிதாகவே யிருந்தது. மதுபானஞ் செய்வதும் இழிந்த செயலாகவே கருதப்பட்டது. இப்பழக்கத்தை மேற்கொண்டோர், ஒளித்து மறைத்தே அதை மேற்கொண்டுவந்தனர். ஆனுல், இப்பொழுதோவெனில் எல்லாந் தலைகீழாக மாறிவிட்டன. பகிரங்கமாகவே இந்த இழிந்த செயல் கையாளப்படுகின்றது. மதுபானஞ் செய்யாதோர் நூற்றுக்கு ஐந்துபேர் தானுமில்லையெனலாம். மதுபானஞ் செய்யாதவர் நாகரிகமற்றவராகவுஞ் சிற்சிலபோது கணிக்கப்படுகின்றனர். பண்டுதொட்டு இப்பாபச் செயல் இருந்துவந்ததாயினும், மேலைத்தேச நாகரிகம் புகுந்த பின்னரே இத்தீய பழக்கம் நம் நாட்டினைப்பற்றிப் பிடித்ததாகும்.

மதுபானத்தை நாட்டினின்றும் ஓட்டப் பன்முறை பிரயத்தனங்கள் செய்யப்பட்டும், அவைகள் யாவும் விரும்பிய நன்மையைக் கொண்டுவந்தில. இற்றைக்குச் சில வருடங்கட்குமுன் தாழ்ந்த வகுப்பினரும் தொழிலாளருமே மதுபானத்தை அருந்தினர். இப்பொழுது பேதமின்றி எவரும் வெளிப்படையாக நின்று அதை அருந்துகின்றனர். அரசாங்க வருமானமும் இத்துறையிற் கூடிக்கொண்டே வருகின்றது. இலங்கையில் இப்பாபச் செயலைத் தடுக்க எத்தனங்கள் கையாளப்படாவிடினும், இந்தியாவிற் காங்கிரஸ் அரசினர் மிக்க அக்கறைகாட்டி வருகின்றனர். சென்னை மாகாணத்தில் எட்டு ஜில்லாக்களில் மது நீக்கம் கடந்த மாதம் முதற்றிகதி தொடக்கம் கைக்கொள்ளப் பட்டிருக்கின்றது. இந்த ஜில்லாக்களிற் கள், சாராயக் கடைகளும் மற்றைய அபின், கஞ்சா விற்கும் கடைகளும் மூடப்படலாயின. இந்த எட்டு ஜில்லாக்களிலும் மதுபானத்தின்பொருட்டுச் சனங்கள் செலவு செய்த பணம் பதினெருகோடி ரூபாவாகும். இப்பணம் இனி அத்துறையிற் செல்லாது நல்ல வழியிற் செலவாகுமென்பதில் ஐயமின்று. மதுவைப்பருகி மானமிழந்தும் பொருளிழந்தும் ஆரோக்கிய மிழந்தும் பாழடைந்தவராகும் இத்தேசமக்கள் இனிச் சந்தோஷமாகத் தூயவாழ்வினை மேற்கொள்வாரன்றே.

அரசினர், மதுநீக்கம் ஏற்படின், அரசாங்க வருவாய்ப் பணம் பெரிதுங் குறைந்துவிடுமென்று அஞ்சுகின்றனர். அரசாங்க வருமானமா, அல்லது ஏழைப் பொதுமக்களின் ஆரோக்கியமுந் தூய வாழ்க்கையுமா, இன்றியமையாதனவென்று கேட்கின்ரும். அரசாங்க வருமானம் துன்மார்க்க வழியாக ஈட்டப்படவேண்டுமென்பதை எவரும் அங்கீகரிக்கமாட்டார். உதாரணமாகச் சென்னை மாகாண அரசினர் இப்பொழுது மதுபானஞ் செய்பவரிடமிருந்து பெறும் வரி 16 கோடி ரூபாவாகும். கொடுத்தவரி இவ்வளவாயின் அவர் பருகிய மதுபானத்தின் பெறுமதி 160 கோடி ரூபாவாகுமென்று மதிப்பிடப்படுகின்றது. இப்பாபச் செயல் நீங்கின் மேலே குறித்த 160 கோடி ரூபாவும் பொதுமக்களின் சீரிய உபயோகத்துக்கு உதவியாகவிருக்குமே. அல்லது சேமமாக வைக்கப்பட்டுப் பெரிய நிதியாகப் பெருகிவிடுமல்லவா? ஆகையால், அரசினர் வருமானத்தை மாத்திரம் இலக்காகக் கொள்வது பெரிய தவறு. பொதுமக்கள் அடையக்கூடிய நன்மையையே சிறப்பாக நோக்க வேண்டும். மேலும் பூரண மது நீக்க முறையைக் கையாளாது பாதிக்குப்பக்கம் கையாள்வதாலும் நன்மை ஏற்படப் போவதில்லை.

பிரதானமாக யுத்தம் ஆரம்பித்த சில வருடங்களில், மதுபானவிருத்தி அளவு கடந்து சென்றுவிட்டதென்பதை எவரும் ஆட்சேபிக்கமாட்டார். ஏழைப் பொதுமக்கள் தாம் மிக்க கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தின் பெரும்பாகத்தை மதுக்கடைகளுக்கே இறுக்கின்றனர். இதனுல் வரும் பாதகங்கட்கும் அளவில்லை. கொலைகள், களவுகள், சண்டைகள், காம விவகாரங்கள் என்பன, நாட்டில் முன்னிருந்ததிலும், இப்போது பன்மடங்காக அதிகப்பட்டு விட்டன. ஏழைமக்கள் என்றுங் கடன்காரராகவிருந்து நீங்காத தரித்திர நிலையில் வாழ்வதற்கும் மதுபானமே முக்கிய காரணமாகும். இத்தீமையைத் தடுப்பாரெவரையுங் காணேம். சன்மார்க்க வாழ்க்கை குன்றி அதர்மமே தலையெடுத்துள்ள இக்காலத்தில், இத்தீமைகளை எப்படி நீக்குவதென்பது பெரிய கேள்வியாகின்றது. அரசினரும் அரசியற்றலைவர்களும் இந்த மிகப் பொறுப்பான—சன்மார்க்கத்தைப்பொறுத்த—விஷயத்தைச்சிந்திக்காவிடின், நம் நாட்டின் கதி யாதாகுமென்பதை யார்தான் கூற வல்லார்?

உண்மையான தலைவர்களை நம் நாட்டிற் காண்பது அரிதாய்விட்டது. தூய்மையான கொள்கைகளையுடைய அரசியற்கட்சிகளும் இல்லையென்றே கூறவேண்டும். இலங்கையில் தேர்தலைமுன்னிட்டு எத்தனையோ அரசியற் கட்சிகள் தோன்றியுள்ளன. ஒரு கட்சியாவது தமது நோக்கங்களை எடுத்துரைக்குங்கால், மது நீக்கத்தை அடிப்படையான கொள்கைகளில் ஒன்ருகக் கொள்ளக்காணேம். இதிலிருந்து நம் நாட்டின் நிலை நன்கு அறியப்படவில்லையா? மதுபானத்தை ஒழிப்பதை நோக்கமாகவுள்ள ஓர் கட்சியுண்டாயின் அதற்குப் பொதுமக்கள் ஆதரவளியாரென்பதை சுயநல வாதிகளாகும் தலைவர்கள் நன்கு அறிவார். மதுபானஞ் செய்வோர் தொகையும் அதற்கு இருக்கும் பெலமும் புன்மடங்கு உறுதியடைந்து விட்டன. அதை வெளிப்படையாக முன்வந்து துணிந்து எதிர்ப்பவர் எவரையுங்காணேம். அப்படி எதிர்ப்போர் தேர்தலில் வெற்றியடைய வியலாதவராவர். அவர்கள் தலைவர்களாகவும் இயலாது. எனவே, யாவரும் இந்தப் பெரிய விஷயத்தைப் புறத்தேவிட்டுவிட்டனர். இப்போது நாடு உய்வடைய வேண்டுமாயின், தூய உயரிய நோக்குடன் தலைவர்கள் கட்சிகளை அமைத்துத் தொண்டு புரிய வேண்டும். வெற்றிகள், சித்திகள் என்பனவற்றை மாத்திரம் இலக்காகக் கொள்ளாது, சன்மார்க்கம் நிலைபெறச் செய்தல்வேண்டும். இது நிலைபெறுமாயின் மற்றையன யாவும் தாமாக வந்து சேருமல்லவா? இதை எமது தலைவர்கள் நன்கு சிந்தித்துச் சீரிய வழியை மேற்கொள்ளின் எல்லாம் நன்மையாகவே முடியுமென்பதே எமது கருத்து.

# பாதை ஓரத்தில்

★

## பாட்டைசாரி

மூன்னேற்றம் அடைந்துவரும் மக்களுக்கு இலவசக் கல்வி அத்தியாவசியமானதெனக் கடந்த வாரம் இலங்கை வந்த பேராசிரியர் மேளே கேட்டி தெரிவித்தார். இலவசக் கல்வியை ஏற்படுத்தியதன் மூலம் இலங்கை சரியான கருமம் ஆற்றியுள்ளதென்பது இந்த அமெரிக்கக் கல்வி நிபுணரின் அபிப்பிராயம். மக்களுக்குக் கல்வியூட்டுவது அரசாங்கத்தின் சிரேஷ்ட கடமையென இப்பெரியார் கூறுவதைக் கேட்டு இலங்கையிலுள்ள பணக்கார வர்க்கம் எரிந்து புகையலாம். அதிகாரத் திமிர் பிடித்த சில கல்லூரிகளின் மனேஜர்மாருக்கு இக் கூற்று நாராசம்போலிருக்கலாம். ஆனுல், பேராசிரியர் கேட்டி உண்மையைத் தெரிவித்தார். சரித்திர விற்பன்னரும் கல்வி நிபுணருமான இப்பெரியாரின் உபதேசம் இங்குள்ள பணம் படைத்த கல்லூரி அதிபர்களின் காதுகளிற் புகுந்து அவர்களைக் குணப்படுத்துமென எதிர்பார்க்கலாமா?

### போதிமுனிவர் பக்தன்

அமெரிக்க அறிஞரின் இலங்கை விஜயத்தைப் பற்றிக் கூறும்போது பிரித்தானிய பௌத்த தலைவரின் கீழைத்தேச யாத்திரை நினைவுக்கு வருகின்றது. கிறிஸ்மஸ் ஹம்பெரீஸ் என்ற இந்த ஆங்கிலேயன் புத்த பகவானின் போதனையில் நம்பிக்கை மிகுந்தவர். மெய்ப்பொருளையறிந்து உள்ளொளி பெறுவதற்காக இவர் ஜப்பான், சீனம், சியம், பர்மா போன்ற நாடுகளைத் தரிசித்து வருகின்ருர்.

அமெரிக்கப் பேராசிரியர் கல்வி சம்பந்தமாக இங்குள்ளவர்களுக்குப் புத்தி புகட்டினுர். மேற்றிசையிலுள்ள இப்பௌத்த மதத் தலைவர் அரசியல் பற்றி பிக்குகளுக்கு நற்போதனை செய்திருக்கின்ருர். அவர் கூறுவதாவது: எந்தப் புத்த குருவுக்கும் எவ்வித அரசியற் கொள்கைபற்றியும் அபிப்பிராயம் கொள்வதற்கு உரிமையில்லை. எப்போது பிக்கு ஒருவர் அரசியல் அரங்கத்தில் அடியெடுத்து வைக்கின்ருரோ அக்கணமே அவர் சங்கத்தினின்றும் விலகியவராகின்ருர்.

### சுதந்திரப் பால்!

கல்வியைப் பற்றியும் சமயத்தைப் பற்றியும் பேசுகையில் டொக்டர் கன்னங்கரா அவர்களின் ஞாபகம் வரத்தான் செய்யும். இவர் கல்வி மந்திரியாகவிருப்பதுடன் ஒருபௌத்தராகவுமிருக்கின்ருர். இலவசக் கல்விப் பாலை இலங்கை மக்கள் உட்கொள்வதற்கு அடிகோலியவரும் இவர்தான். இதற்காக அவர் 'கல்லெறி'யும் படுகின்ருர். இருந்தும் ஸ்ரீ கன்னங்கரா அஞ்சாநெஞ்சத்துடன் காரியம் பார்க்கின்ருர்.

சமீபத்தில் இவர் இலவசப் பால் நிலையம் ஒன்றைத் திறந்து வைத்தபோது மக்களைப் பாலுண்டு பலம் பெற்றுச் சுதந்திரம பெற முயற்சிக்க வேண்டுமென இனிமையாகப் பேசினுர். புட்டிப்பால் உண்டு, சுதந்திரப் பால் அனுபவிக்கலாமென்பது பகற் கனவு. சுதந்திரத்துக்கு அப்பால் நிற்கும் ஈழம் முதலிற் பாலும் தேனும் பாயும் பூமியாக மாற வேண்டும். அப்புறந்தான் வேறு விஷயங்கள்,

சோல் பெரிப் பாலுண்டு
சோம்பித் திரிவோர்க்கு
சொந்தப்பால் எதுக்கெடி! ருதம்பாய்
சொந்தப்பால் எதுக்கெடி?

### நன்றிகெட்ட சமூகம்

சுதந்திரம் பெறவேண்டுமானுல், சொந்த நாட்டு மக்கள் செய்யும் சேவைகளை மெச்ச நாம் முதலிற் பழகிக்கொள்ள வேண்டும். சமீபத்தில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரியின் [illegible] விழா நிகழ்ந்தது. அதன் நிமித்தம் ஒழுங்கு செய்யப்பெற்ற விருந்து வைபவத்தின்போது ஸ்ரீ குலரத்ன பேசிய வார்த்தைகள் உருக்கமானவை. ஸ்ரீ குலரத்ன இருபத்தைந்து வருடகாலம் பௌத்த பிரம்ம ஞான சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர். ஆனந்தாக் கல்லூரியின் அதிபராகவும் திகழ்ந்தவர். இவர் கல்லூரியை விட்டு விலக நேர்ந்தபோது அச்சங்கம் அவரின் சேவைகளுக்காக நன்றி தானும் கூற நினைக்கவில்லையாம். ஆம்; சொந்தநாட்டிற் பிறந்தவனை இலங்கை அதிகம் கௌரவிப்பதில்லை. அவனுக்குரித்தான பங்கையும் கொடுக்க மறுக்கின்றது. வேண்டுமானுல் அவனுடைய முகத்திற் கரி பூசவும் இவர்கள் தயார். இது தூசுபிடித்த அடிமை வாழ்வின் கஞ்சற்குணம். அது ஒழிக!

### யாருடைய பணம்?

சேவையைப் பற்றிக் குறிப்பிடும்போது சேர் ஒலிவரின் லண்டன் யாத்திரை நினைவுக்கு வருகின்றது. ஏதோ இலங்கையருக்குச் சேவை செய்வதாகச் சொல்லிச் சீமைக்குப் பறந்தார். இவர் கடந்த சிலமாதங்களாகச் செய்து முடித்த காரியங்கள் யாவை? செலவுசெய்த பணம் யாருடையது? அரசாங்கத்தின் பணம் என்ருல் அது ஆற்றிலேபோகின்ற தண்ணீரா? இலங்கையில் இல்லாத காலத்தில் இவர் செய்த வேலைகளைப்பற்றி இபபோது ஒருவருக்கும் கவலையில்லை. ஆனுல் அவர் இங்கு நிற்குங்காலத்திற் செய்யத் தவறியவற்றைத்தான் நாடு அறிய விரும்புகின்றது. கணக்குப் பரிசோதனைப்பகுதித் தலைவரின் அறிக்கையைப்பற்றித்தான் குறிப்பிடுகின்றேன். 697-க்கு அதிகமான கேள்விகள் தகுந்த விடைகளை எதிர்பார்த்து நிற்கின்றன. இவற்றுள் 578 கேள்விகளுக்கு சேர் ஒலிவரே வகைசொல்லியாகவேண்டும். இது நடக்குமா?

### ஆச்சார்ய கிருபளானி

சிந்து இன்று ஒருபடி உயர்ந்துவிட்டது. ஆச்சார்ய கிருபளானி காங்கிரஸ் தலைவராகப் பதவி வகிப்பது பாரதநாட்டுக்கே ஒரு பெருமை. வெளித்தோற்றத்துக்குக் 'கரடு முரடாக' காட்சியளிக்கும் ஸ்ரீ கிருபளானி சிறந்த ஞானம் படைத்தவர். பார்வைக்கு ஒரு புரட்சிக்காரனுகவிருந்தாலும் ஆழ்ந்த அறிவும் கலைத்தெளிவும் மிருந்தவர். காந்திஜியின் ஆசீர்வாதம் இவருக்குத் தாராளமாகவுண்டு. ஸ்ரீ கிருபளானியின் தலைமையிற் கூடவிருக்கும் காங்கிரஸ் சரித்திரம் பிரசித்தி வாய்ந்ததாகவேயிருக்கும் என இப்போதே கூறிவிடலாம்.

### ஆபிரஹாம் லிங்கன்

அமெரிக்கத்தலைவரான ஆபிரஹாம் லிங்கன் அவர்களுக்குத் தமதுமனைவியைக்கண்டால்ஒரே குடல் நடுக்கம். இருவரும் ஒருநாள் சாப்பிட்டுக்கொண்டிருக்கையில் லிங்கன் தம் மனைவிக்குக் கோபம் உண்டாகும்படி ஏதோ செய்துவிட்டார். அவளுக்குக் கரைமீறி எழுந்தது வெஞ்சினம். உடனே ஆவி பறந்துகொண்டிருந்த ஒரு கோப்பை சுடு காப்பியை எடுத்து அப்படியே கணவனின் முகத்தில் 'அபிஷேகம்' செய்தாள். இவ் வைபவம் விருந்தினரின் முன்னிலையிலேதான் நிகழ்ந்தது, லிங்கன் கல்லுப் பிள்ளையார்மாதிரியிருந்து கொண்டார். உடனே அதிதி ஒருவர் (பெண்) குளிர்ந்த துவாய் ஒன்றை எடுத்து அவருடைய முகத்தை ஒற்றினராம்.

உலகத்தையே ஆட்டி வைக்கும் எத்தனையோ ஆண்களைப் பெண்கள் வீட்டிற் கோடுகீறி நிறுத்தி வைக்கின்றனர். சக்தி பெரிதுதான்! சந்தேகமில்லை.

# நமது வாசிகசாலை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுத்தாளர்களின் விஷயங்களைப் படித்து மகிழலாம். பி. ஸ்ரீ. பொ. திருகூடசுந்தரம், மந்திரி பக்த வத்ஸலம், பி. கோதண்டராமன், கி. வா. ஜ., எம். எஸ். கமலா என்போரின் கட்டுரை கதைகள் உட்படப் புகைப்படங்களுடனும், சித்திரங்களுடனும் 'பாசரசு' காட்சியளிக்கின்றன. இம்மலரில் உள்ள குறைகளைக் 'கலை' விசேஷ வெளியீடு நிறைவுசெய்யுமெனப் 'பாசரசு' தம்பதிகள் தெரிவிக்கின்றனர்.

**"மதுரமித்திரன்:** ஆசிரியர்: என். சுப்பிரமணியம். விலாசம்: நாயக்கர் புதிய வீதி, மதுரை. விலை ரூபா 1-8-0.

காங்கிரஸ் 60-ம் ஆண்டு ஞாபகார்த்தமாகவும் தீபாவளி வெளியீடாகவும் பிரசுரிக்கப் பெற்றுளது. 144 பக்கங்களோடுகூடியது. பல அரிய பெரிய அரசியற்கட்டுரைகளைக் கொண்டிருக்கின்றது. இடைக்கால அரசாங்கம் காங்கிரஸ் தலைவர்கள் என்பனபற்றிய கட்டுரைகளும் பலவாகும். அத்துடன் இலக்கிய விஷயங்களும் பல சிறந்த எழுத்தாளரால் எழுதப்பட்டிருக்கின்றன. கண்களைக்கவரும் படங்களைக்கொண்டது.

●

**கிராம ராஜ்யம்:** மாதப் பத்திகை. ஆசிரியர்: கே. வெங்கடாசலபதி. விலாசம்: காந்தி நிகேதனம், கல்லுப்பட்டி P.O. மதுரை. ஆண்டுச் சந்தா ரூபா 6-0-0, தனிப்பிரதி விலை அணு 8.

காந்தியடிகளின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இ. புதிய மாசிகை வெளிவருகின்றது. ஒவ்வொரு கிராமமும் சிறந்த குடியரசாகத் திகழவேண்டின் சத்தியமும் அஹிம்சையும் அத்தியாவசியமானவை.

கிராமச்சீரமைப்பு, கிராமப்பொருளாதாரம்போன்ற துறைகளிற் பழுத்த அனுபவம்வாய்ந்தோரின கட்டுரைகளைத் தாங்கித் தமிழ் நாட்டில் அறிவு பரப்புவது இப் புதிய மாசிகையின் நோக்கம். நாமக்கல் கவிஞர், ஸ்ரீ ஜே. ஸி. குமரப்பா, கல்வி மந்திரி ஸ்ரீ அவினுசிலிங்கம் செட்டியார், ஸ்ரீ மு. அருணுசலம் ஆதியோர் உட்படப் பல அறிஞர்கள் கட்டுரைகள், கவிதைகள் எழுதியுள்ளனர்' அழகான பதிப்பு.

**செல்வி:** மாதப்பதிப்பு. ஆசிரியர்: ஏ. சுப்பையா. விலாசம்: கோட்டாறு, நாகர்கோவில். ஆண்டுச் சந்தா ரூபா 3-0-0- தனிப்பிரதி அணு 4.

இப் புதிய மாதப் பத்திரிகையில் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், கதைகளும், கவிதைகளும் இடம் பெறுகின்றன. ஸ்ரீ சிதம்பரநாதனுபிள்ளை 'நாஞ்சி நாட்டில் கட்டாயக்கல்வி' என்னும் விஷயம்பற்றி எழுதியுள்ளார். 'இலக்கணம் வேண்டுமா?' என்ற கட்டுரை குறிப்பிடத்தக்கது. இக் கட்டுரையாளர் அடுத்த இதழில் 'இலக்கணம் வேண்டாம்?' என்பது பற்றி ஆராய்வார். சிறுவர் பகுதியும் உண்டு.

**மின்னெளி:** நவீன மாத வெளியீடு. விலாசம்: ஸ்டெலா கலாசாலை. ஜா—எல. ஆண்டுச் சந்தா ரூபா 3-00. தனிப் பிரதி சதம் 30.

இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என்பன, இவ்வெளியீட்டின் அம்சங்கள். 'கதைப்போட்டி'யும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கவர்ச்சியான தோற்றம்.

### ஸ்ரீ. காமராஜ் இலங்கைவிஜயம்

மிக முக்கியமான விஷயங்கள் காரணமாகத் தமிழ் நாட்டுக் காங்கிரஜ் தலைவர். ஸ்ரீ. காமராஜ் தமது இலங்கை விஜயத்தைப் பின் போட்டிருக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா

# குண்டு வீச்சு, கோழைத்தனம்

## "இழிவுக்கு இடங்கொடாதீர்கள்"

—காந்திஜி

**கிழக்கு வங்காளத்திலும் பிஹார் பிரதேசங்களிலும் இன்று நிகழ்ந்துவரும் அட்டூழியங்களும் கலவரங்களும் இந்திய தேசபக்தர்களுக்கு மிகுந்த கவலையை உண்டாக்குகின்றன. முஸ்லீம்லீக் இடைக்கால அரசாங்கத்துள் நுழைந்த பின்னருமா இக்கொடுமைகள் நிகழவேண்டும்?**

பிஹாரில் நிகழும் பாதகச் செயல்களைக்கண்டு நேருஜி "கலகக்காரரை வெடிகுண்டுகளுக்கு இரையாக்குவேன்" என்று பயமுறுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நேருஜி ஆத்திர மிகுதியால் முழக்குவதைக் கேட்ட காந்திஜி "அது பிரிட்டன் கையாளும் முறை. காங்கிரஸ் மக்களின் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனம். குண்டு வீசுவது கோழைத்தனமானது. இப்படிச் செய்வதாகில் நாம் சுதந்திரத்துக்கு உலை வைப்பதாகும்" என காந்திஜி தெரிவித்துள்ளார்

டாரேக்ஞ என்ற இடத்திற் பண்டித நேரு பேசும்போது குறிப்பிட்டதாவது "முஸ்லீம் ஒருவரை நீங்கள் கொல்லுவதாகில் முதலில் நீங்கள் என்னைக் கொலைசெய்யவேண்டும். அதன் பின்னதாக எனது பிணத்தின் மீது ஏறிச்சென்றுதான் அவரை நீங்கள் கொலை செய்யமுடியும்."

இதிலிருந்து நிலைமை மகா மோசமாகவிருக்கின்றதென உணரலாம். அத்துடன் காந்திஜி சாகும் வரை உண்ணுவிரதம் அனுஷ்டிப்பதாகக் கூறுவது உலக மக்களிடையே மிகுந்த துக்கத்தை உண்டாக்காமல் இருக்கமுடியாது.

காந்தி மகாத்மாவின் உயிர் இந்திய மக்களின் பொக்கிஷமாகும். ஆகவே இந்தவேளையில் உண்ணுவிரதம் அனுஷ்டிப்பது மேலும் குழப்பங்களையும் பீதியையும் உண்டாக்குமெனக்கூறி, அப்படிச்செய்யாதொழியும்படி இந்து மகாசபைத்தலைவர் டொக்டர் முக்கர்ஜி காந்திஜியை வேண்டுகின்றார். அகில உலகத்தின் அபிப்பிராயமும் இதுவேயாகுமெனக் கூறவேண்டியதில்லை.

இந்நிலையில் காந்திஜி பிஹார் மக்களுக்கு விடுத்திருக்கும் வாசகம் ஊன்றிப்படிக்கத்தக்கது.

அவர் எழுதுவதாவது:

"பிஹார் நாடு எனது கனவுகளையெல்லாம் பொய்யாக்கிவிட்டது. மிகைப்படுத்தப்பட்ட அல்லது பட்சபாதமான செய்திகளை நான் நம்பவில்லை. பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் அங்கு இருந்து வருவது பிஹாரின் கோரபத்தை கூறும் அலங்காரமான கதையாகின்றது. முஸ்லீம் லீக் ஆட்சியின் விளைவெனக் கூறிவிடுவது சுலபமான காரியம். ஒரு கட்சி பிழைசெய்தால் அதன் எதிர்க்கட்சி அதைச் சாட்டாகக் கொண்டு கருமமாற்றுவது நீதியின்பாற்பட்டதன்று. நான் ஒரு வாரத்துக்கு மேலாகக் கல்கத்தாவிலே தங்கியிருந்தபோதிலும், உண்மையாகவே கூறுகின்றேன் வங்கத்துக் கோரசம்பவம் எவ்வளவு பாரதூரமானதென்பது இதுவரை எனக்குத் தெரியாது.

"பிஹார் என்னை அழைத்தவிடத்தும் நவகாளி விஷயங்களை இடைநடுவில் விட்டுச் செல்வதை நான் விரும்பவில்லை. முஸ்லீம் லீக்கை காங்கிரஸ்காரர்கள் குற்றஞ்சாட்டினால் அது வகுப்புவாதத்துக்கு எதிரான மற்றுமோர் வகுப்புவாதமாகும். பிஹாரில் பதினைந்து சதவிகிதமான முஸ்லீம்கள் உளர். அவர்களை காட்டுமிராண்டித்தனமாக நசுக்குவது தேசியமாகுமா? ஒரு சில பிஹார் மக்களின் பாபச் செயல்களுக்காக பிஹாரிலுள்ள சகலமக்களையும் கண்டிப்பது தவறென ஒருவரும் எனக்குக் கூறவேண்டியதில்லை. ஒரு பிரிஜ்கி வேஷார் பிரசாத்தையும் ஓர் இராஜேந்திர பிரசாதத்தையும் காட்டிப் பிஹார் பெருமைகொள்ளுகின்றது. பிஹாரில் நிகழும் தவறான போக்குகள் நீடித்துக்கொண்டிருக்குமாகில் பாரதநாட்டிலுள்ள சகல இந்துக்களையும் அகில உலகும் கண்டித்தே தீரும்.

"பிஹாரில் நடப்பதைச் சாட்டாகக்கொண்டு ஜனாப் ஜின்னா காங்கிரஸை ஓர் இந்து ஸ்தாபனமென மேலும் இகழ்ந்துபேசலாம். காங்கிரஸில் சீக்கியர்களும், முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும், பார்ஸிகளும் இருக்கின்றனர் என்பது உண்மை. பிஹாரில் உள்ள அத்தனை இந்துக்களும் அங்குவதியும் சிறிய தொகையினரான முஸ்லீம்களைத் தமது சொந்தச்சகோதரர்களாகக் கருதவேண்டும். அவர்களுக்கும் தங்களுக்குவேண்டியது போன்ற சகல பாதுகாப்புகளையும் உதவவேண்டும். இது அவர்களுடைய கடமை. காங்கிரஸின் கௌரவத்தை உயர்த்துவதற்காக அதிகம் பாடுபட்டு உழைத்த பிஹார் தனது சவக்குழியைத்தாமே தோண்டுவதற்குப் போட்டி போடாதிருப்பதாக.

"எனது அஹிம்சைத் தத்துவத்தைக் குறித்து நான் எவ்விதத்திலும் வெட்கப்படவில்லை. இந்த வேளையில் அஹிம்சை இவ்விதமாக என் மூலம் வெளியாகுமென்பதை அறிவதற்கு நான் வங்காளம் வந்துள்ளேன். இக்கடிதத்தின் மூலம் உங்களுக்கெல்லாம் அஹிம்சையின் தத்துவங்களைப் போதிப்பது எனது நோக்கமல்ல. நீங்கள் செய்த வேலைகள் ஒருபோதும் வீரச் செயல்களாகக் கருதப்பட மாட்டாதென நான் கூறப்போவதுமில்லை. பல ஆயிரம் பேர் சேர்ந்து ஒருசிலரை கொலை செய்து வீழ்த்துவது வீரம்அன்று. அது கோழைத்தனமாகும். இது தேசியமுமாகாது. இது அவர்களின் சமயத்துக்கே இழுக்கை உண்டாக்கும் விஷயமாகும். நீங்கள் கௌரவக்குறைவாக நடந்துகொண்டீர்கள். இந்தியாவின் பெருமைக்கே பங்கம் விளைத்து அதை உலகம் பார்த்துச் சிரிக்க வைத்துவிட்டீர்கள்.

"இராணுவத்தை அகற்றிக்கொண்டு நீங்களும் கிளம்பிவிடுங்கள், இந்தியா சம்பந்தமான வேலைகளில் ஈடுபடுங்கள்' என நீங்கள். பண்டிதர் ஜவஹரையும், நிஷ்தார் சாஹிப், இராஜேந்திரப் பிரசாத்தையும் பார்த்து சொல்ல வேண்டும். இத்தனைக்கும் நீங்கள் புரிந்த மிருகத்தனமான வேலைகளுக்காக பச்சாத்தாபப்படவேண்டும். முஸ்லீம்களைப் சொந்தச் சகோதரர்கள் போலப் பாதுகாத்துவருவோம் என்று கூறவேண்டும்.

"அரசாங்கத்தின் உதவியுடன் அழிந்துபோன முஸ்லீம் மக்களின் வீடுகளைத் திருத்தி அமைக்க வேண்டும். உங்கள் மந்திரிகளைப் பற்றி எனக்குப் பலர் கூறியிருப்பதை நீங்கள் எப்படி அறிவீர்கள்.

"நான் என்னை, உங்களில் ஒருவனாகவே கருதுகின்றேன். எனக்கு உதவி செய்வதன் பொருட்டு என்னிடம் நண்பர்கள் எவரும் வரக்கூடாது. கடவுள் என்னைக் காப்பாற்றுவார்!"

தங்கள் ஊழியன்,
(ஒப்பம்) எம். கே. காந்தி

---

# நமது வாசிகசாலை

'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.

**புரட்சி செய்த பேனா வீரர்:-** ஆசிரியர்: ப. கோதண்டராமன் எம். ஏ.; பதிப்பாசிரியர்: பி. ஸ்ரீ; பிரசுரம்: தமிழ்நாடு, வெளியீடு 33 பிராட்வே, சென்னை; பக்கம் 169. விலை: ரூபா 3-0-0.

இந்நூல் பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்கப் புரட்சி, விஞ்ஞானப் புரட்சி, தொழிற் புரட்சி, கம்யூனிஸ்ட் புரட்சி, பாசிஸ்ட் புரட்சி என ஆறு அங்கங்களை அடக்கியுள்ளது. அரசியல், விஞ்ஞானம், சமூகம் என்பவற்றிற் புரட்சிகளை உண்டாக்கியவர்கள் எழுத்தாளர்கள் என்பதை இந்த நூலாசிரியர் தெளிவாக விளக்குகின்றார். 'கத்தியைக் காட்டிலும் பேனா வலிமை வாய்ந்தது' என்னும் உண்மையைப் பலதிருஷ்டாந்தங்களைக்கொண்டு அழகாக விளக்கிக் காட்டுகின்றார் இவ்வாசிரியர்.

இந்நூலில் பிரெஞ்சு, அமெரிக்கப் புரட்சிகளும், கம்யூனிஸ்ட், பாசிஸ்ட் புரட்சிகளும் ஏற்படுவதற்கு விதைபோட்ட பிரபல எழுத்தாளர்களின் வரலாறுகளையும், அவர்கள் எழுதிய பிரதான நூல்களையும், அவர்கள் எவ்வளவுதூரம் பின்னர் ஏற்பட்ட புரட்சிகளுக்குக் காரணராயிருந்தனர் என்பதையும் ஆசிரியர் சுருக்கமாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

1789-ம் ஆண்டு நடந்த பிரெஞ்சுப் புரட்சிக்கு அடிகோலியவர் அந்நாட்டுப் பேனாவீரரே. அவர்களில் வோல்தேர், மொந்தெஸ்கியோ, திதெரோ, ருஸ்ஸோ முக்கியமானவர்கள். ருஸ்ஸோ எழுதிய நூல்களில் சமுதாய ஒப்பந்தம் மிகச் சிறந்த நூல். இவரது அரசியல்-சித்தாந்தத்தின் பிரதான அம்சங்களை இதிற் காணலாம். இதன் வாசகங்கள் பிரான்சிய நடுத்தர வகுப்பினர் மனதில் நன்கு பதிந்தன. பின்பு இதர அடிமை நாடுகளில் அவை எதிர் ஒலி செய்தன. இவருடைய பேனா அமெரிக்காவிற் சுதந்திரப் போரையும், பிரான்சில் இரத்தப் புரட்சியையும், ஏனைய ஐரோப்பிய நாடுகளில் பெரும் அதிர்ச்சியையும் உண்டாக்குவதற்குக் காரணமாயிருந்தது.

அமெரிக்க சுதந்திரப்போரைப் பற்றி நாம் நினைக்கும்பொழுது வாளேந்திப் போரிட்ட வாஷிங்டனின் பெயரே நம் ஞாபகத்தில் வருகின்றது. ஆனால் தன் பேனாவால் பெரும் புரட்சிசெய்து சுதந்திரப் போரை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்ற ரொம்பேய்ன் என்ற எழுத்தாளனைப்பற்றிப் பலர் அறியாதிருக்கலாம். இவர் எழுதிய சாமானிய அறிவு என்னும் நூலும் நெருக்கடி என்ற துண்டுப் பிரசுரமும் மக்கள் சுயேச்சையைப் போரில் மும்முரமாக ஈடுபடத் தூண்டின. வாஷிங்ரன் எவ்வளவு கீர்த்திக்கு உரியவனோ அவ்வளவுக்கு இந்தப் பேனாவீரனும் உரியவனென்பதை ஆசிரியர் நன்கு விபரித்திருக்கிறார்.

ஹாரியெட் எலிஸபெத் பீச்சர்ஸ்டௌ என்ற அமெரிக்க பெண் எழுத்தாளர், நீக்ரோ அடிமைகளை வெள்ளையர் கொடுமையாக நடத்தியதைக் கண்ணுற்று மனம் மிக நொந்து, அதற்குப் பரிகாரம் தேடுவதற்காக ரொம்மாமாவின் குடில் என்னும் நாவலை எழுதினார். இந்த நாவல் செய்வித்த புரட்சியை வேறு எந்த நாவலும் செய்வித்ததில்லை. அமெரிக்க ஐக்கியநாட்டில் உள்நாட்டுப் பெரும் போர் நிகழ்ந்ததற்கும், ஈற்றில் நீக்ரோ அடிமைகள் விடுதலை பெற்றதற்கும் இந்நாவலே காரணமாயிற்று.

பாட்டாளி மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்டவர்களில் கார்ல் மார்க்ஸ் முதன்மை ஸ்தானத்தை வகிக்கின்றார். பொது உடைமைத்தத்துவத்தின் கர்த்தாவும் இவரே. மார்க்ஸ் எழுதிய முதலீடு என்றநூற் பொருளாதாரத்துறையிற் பெரும் புரட்சியை உண்டாக்கி யிருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இதை வேத வாக்கைப்போல் மதிக்கின்றனர். சில தேசத்தவர் மார்க்ஸின் சித்தாந்தத்தைப் பின்பற்றுவதற்காகப் புரட்சிசெய்து, வெற்றிபெற்று அச்சித்தாந்தத்தின்படி அரசாங்கத்தை நடாத்துகின்றனர் என்பதையும் ஆசிரியர் நன்கு விளக்கி யிருக்கின்றார்.

இந்நூலிலுள்ள கார்ல்மார்க்ஸ், மார்க்ஸின் சித்தாந்தம் என்னும் அதிகாரங்கள் முக்கியமானவை. தொழிலாளர் கிளர்ச்சிகள், வேலைநிறுத்தங்கள் அதிகம் இக்காலத்தில் நிகழ்கின்றன. அவற்றின் காரணங்கள் நோக்கங்கள், பயன்களை ஒருவாறு அறிவதற்கு இந்த அதிகாரங்கள் நமக்கு நன்கு உதவி புரிகின்றன.

ஆனாற் சில பேனா வீரரின் எழுத்துக்கள் தீமை செய்யும் ஆற்றலுடையன என்பதையும் இவ்வாசிரியர் நமக்கு எடுத்துக் காட்டியிருக்கின்றார். சோறல், நியெட்சே போன்றவர்களின் எழுத்துக்கள் ஹிட்லர், முஸோலினியின் பாசிஸிட் புரட்சிக்கு ஆக்கமளித்துள்ளமையை ஆசிரியர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

பாமரரும் விளங்கக்கூடிய தெள்ளிய எளிய, நேரான வசனநடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், தமிழ்நாட்டவரின் அறிவு விருத்திக்கும் இத்தகைய நூல்கள் அவசியந் தேவை. இந்நூலின் பதிப்பாசிரியர் கூறியதையே நாம் வாசகர்களுக்கு மீண்டும் சமர்ப்பிக்கின்றோம். "இன்றைய உலகப் போக்கை நன்குணர்ந்து நாளைய உலகத்தின் வடிவத்தையும் ஒருவாறு ஊகித்து அறிந்துகொள்வதற்காக இப்புத்தகத்தைத் தமிழ்மக்கள் வாசிக்கவேண்டியது அவசியமாகும்.

— க. அருணசலம்

### விசேஷ மலர்கள்

**சிவாஜி ஆண்டுமலர்:-** விலை: 2-00 விலாசம்: பெரிய கடைவீதி திருச்சி.

சிவாஜி வார வெளியீட்டின் பன்னிரண்டாம் ஆண்டுத் தீபாவளி மலராக இது நறுமணப் பொலிவுடன் காட்சி தருகின்றது. பிரபல எழுத்தாளர்கள் பங்குபற்றி இதனைச் சிறப்பித்து இருக்கின்றனர், ஸ்ரீ ரா. நா. அவர்கள் பலதிறப்பட்ட மனித சுபாவத்தை முதலிற் காந்தி அடிகளின் செயலிலேயே வைத்துக் காட்டி இருக்கின்றார். 'கரிச்சான் குஞ்சு' எழுதியிருக்கும் 'ஆளப்பிறந்தவள்' என்பது சிறு நவீனம் போன்றதெனலாம். அதன் முடிவுதான் முகவரிக்குச் சிறிது பொருந்தாதவாறு முடிந்து விட்டது. எனினும் சமயத்துக்கேற்ப புத்திசாதுரியமான உரையாடல்கள் வாசகர்களுக்குக் களிப்பூட்டுவன

சென்ற ஆண்டு 'மாறும் இலக்கணம்' என எழுதி தமிழ் மறுமலர்ச்சிப் பாணியில் புத்துணர்ச்சியைக் கிளப்பிய, ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி அவர்கள் இம்மலரில் தமது யாப்பிலக்கண ஆராய்ச்சி முறையில் 'குயிலின் ஸ்ருதி' என்னும் நுண்பொருளமைந்த சிறு காவியத்தை வரைந்துள்ளார். அவரது யாப்பிலக்கணப் பரிசோதனையின் முடிவுக்கு இலக்கியமாக இது அமைந்தது எனலாம். கலித்தொகையின் மாண்பும் இரண்டொரு உதாரணங்களால் விளக்கப்பட்டுள்ளது. வேலூர் கந்தசாமி கவிராயர், மந்தஹாசன் என்போரின் கவிதைகளுமுண்டு.

'குஹன்' சந்தர்ப்பத்தை உபயோகித்து ஸ்ட்ரைக் என்னும் விடயத்தை நகைச்சுவை ததும்ப வரைந்துள்ளார். 'ராமர் முதலிய தர்மாத் மாக்களால் விதைக்கப்பட்ட ஸ்ட்ரைக் விதை இப்பொழுது தேசமெங்கும் நாளொரு நோட்டீஸும் பொழுதொரு பட்டினிபாட்டாளமாக வளர்ந்து விட்டது' என அதன் ஆசிரியர் எழுதியிருப்பதை நோக்குக.

'மூர்த்தி'யின் சித்திரங்களே மலரெங்கும் நிறைந்துள்ளன. பாரதியின் குயிலின் பாட்டுக்குச் சித்திர விளக்கம் தந்து அப்பாடலின் பண்பை இன்னுமொருபடி உயர்த்தி இருக்கின்றார். 'சுகி' கவிகளின் இயல்பையும் அவற்றைக் கற்பிப்பதின் நோக்கத்தையும், கற்பிக்கும் முறையையும் ஆராய்வுடன் வரைந்துள்ளார். இலக்கியத்தின் நோக்கம் நிறைவேற வேண்டுமாயின் இலக்கணவேலியை இட்டுத் தடைப்படுத்தாமை அவசியமே. இதனால் இலக்கண நெறிகளை முற்றாகத் தள்ளுவதென்பதும் இல்லை,

ஸ்ரீ இராஜ அரியரத்தினம் அவர்கள் தந்துள்ள 'காசை வையுங் கீழே!' கட்டுரை எழுத்தாளருக்கும் பிரசுரகர்த்தாக்களுக்குமுள்ள தொடர்பை நன்கு விளக்கிக் காட்டும் முறையில் அமைந்துள்ளது. பண்டைக்காலத் தமிழரின் வழக்கமாக இலக்கியங்களிற் காட்சிதரும் 'கோல்லேறு தழுவுதல்' என்பதைத் தற்கால வழக்குகளுடன் ஒப்ப நாட்டிச் சிறந்த முறையில் ஸ்ரீ ப. கோதண்டராமன் வரைந்துள்ளமை நயப்புக்குரியது. பரிவும் பிரிவும் என்ற மாணவப் பருவந்தொட்டு வளர்ந்த காதற் கதை முற்றுப்பெறாத காதலில் பரிவு நிலையில் முடிவுறுகின்றது.

உலகின் பலதிறப்பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சித்திரித்துக் காட்டும் சிறுகதைகள் சிந்தனையைத் தூண்டித் தம்வசம் ஈர்ப்பனவாக அமைந்தமை ஆசிரியர்களின் கருத்தழகைக் காட்டுவனவாகும். இவற்றை எம். எஸ், கமலா, ஜயலட்சுமி ஸ்ரீனிவாசன், தி. ஜானகிராமன், ஆர். ஆறுமுகம், ஸ்ரீதரம் குருஸ்வாமி, 'வல்லிக்கண்ணன்' ஆதியோர் சிருஷ்டித்திருக்கின்றனர்.

இங்ஙனமாயினும் சிறந்த வர்ணப்படங்களையும் சேகரித்துச் சேர்த்திருப்பின் இன்னும் சிறப்புறும். இடையிடையே வார்சுஸ்தர்ப்பம் ஷி ஹாயம் ஸந்தேஹம், ஏகலைவமுறை, ஆக்ரோஷம் என்பனபோன்ற பதங்களும், பெருக்கம், டெரியார், போருது, ஸ்ட்ரைகாசாரம் ஆற்றங்கரை, அரைகுரை என்பன போன்ற பிழையான உபயோகங்களும் செறிந்துள்ளன.

பல கஷ்டங்களுக் கூடாகவும் இவ்வளவிலேனும் இது வெளிவந்து வாசகர்களை மகிழ்வித்தமை போற்றற்குரியதே.

நா. க.

**பாலர் மலர்:** ஆசிரியர்: வி. எஸ். நடேசன், புதுக்கோட்டை. விலை அணா 8.

சிறுவர்களுக்கென அழகாக நல்லமுறையில் 'பாலர்மலர்' தீபாவலி இதழ் வெளியாகியிருக்கின்றது. கதைகளும், அறிவை வளர்க்கும் துணுக்குகளும், சித்திரங்களும் அதிகமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. உலகக் குழந்தைகள் என்ற சித்திரம் நன்று.

**பாசரசு:** ஆண்டுமலர். பிரசுரம்: 'பாசரசுக்காரியாலயம்' 45-46 அரண்மனைக்காரத்தெரு, சென்னை விலை ரூபா 2-0-0.

தீபாவலித்திருநாளுடன் வெளியிடப்பட்டிருக்கும் இவ்வாண்டு மலரில் தமிழ்நாட்டுப் பிரபல

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் ஒருநாள்

இலங்கை மக்கள் அனைவரையும் சிறைசெய்யப் போவதாக ஒரு வதந்தி; சகலரையும் சிறைசெய்வதாகில் போதிய இடமில்லையாது. ஆகவே, 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்களைத்தான் சிறைசெய்வதாக மற்றொரு செய்தி. தவிர, எங்களின் தலைவராக உள்ளவர்களைத்தான் சிறைசெய்வதென்ற கதையும் எட்டியது. இப்படியாக ஏக குழப்பம். இரவில் தூங்கும்போதும் இதே சிந்தனைதான். ஏதும் சந்தடி கேட்டால் பொலிசார் வந்து வாசற் கதவை இடிக்கிறார்களோ என்ற திகில். காரியாலயத்தால் வீடு திரும்ப நேரம் தவறிவிட்டால் வீட்டிலுள்ளவர்களின் ஏக்கம் சொல்லமுடியாது. இந்நிலையில், ஒருநாள் அதிகாலை நாலு மணிக்கு வீட்டு வாசலில் ஒரு லொறி வந்து நின்றது. நேரே பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டுசென்றார்கள். உடுத்திருந்த உடைகளைச் சோதனை செய்து அதிலுள்ள பணம் முதலியவற்றை எடுத்தனர்.

இதன்பின் ஓர் இருட்டறையில் வாசம். கண்ணுக்கொன்றும் புலப்படவில்லை. அங்கு சில உருவங்களின் சத்தம்மட்டுங் கேட்டது. கூரையில்பதித்த கண்ணாடிமூலம் ஒளி தெரிந்தது. பொழுது ஏற ஏற அந்த அறையில் உள்ளவர்களையும் அறிய முடிந்தது. அவர்களின் நிலையை எப்படிக் கூறுவது: தசை என்பது சிறிதுமின்றி ஒரே எலும்புக் கூடுகளாகக் காட்சியளித்தனர். பின்பு நடந்த சம்பாஷணையிலிருந்து சிலர் பல மாதங்களாக எவ்வித விசாரணையுமின்றி அடைக்கப்பட்டிருக்கின்றனர் என்று தெரிந்தது. எட்டுக் கஜ தூரமுள்ள இந்த அறையில் நான் உட்பட 16 ஜனங்கள் இருந்தோம்.

பகல் இதற்குள் அடித்துச் சிலநாழிகைசென்றதும், பின் வாசற் கதவு சிறிதாகத் திறக்கப்பட்டது. எனது நண்பர்ஒருவர்சத்தடி செய்யாமல் எழுந்து சேவகன காதில் ஏதோ கூறினர். பின்பு என்னை வரும்படி சைகை காட்டியதும் நானும் சென்றேன். இருவருமாக ஒரு கோடியை அடைந்தோம். அங்கே ஒரு அடுக்குச் சட்டியில் சாதமும், ஒரு கடுதாசிப் பொட்டலமும் இருந்தன. அவரின் வற்புறுத்தலின் மேல் சிறிது சாதம் சாப்பிட்டேன். கடுதாசிப் பொட்டலத்துடன் எங்கள் கூட்டுக்கு வந்து சேர்ந்தோம். அதில் நாலு உளுந்து வடையும் இரண்டு வாழைப் பழங்களும் இருந்தன. இவற்றை ஓரிடத்தில் வைத்துவிட்டுப் பத்திரிகை வாசித்தார். அது அன்று வெளியான தினசரிபபத்திரிகை. பிரசுரத்திற்காக வெளியிடப்படும் பத்திரிகையானாலும் மறைபொருளாகச் சில உண்மைகள் புகுத்தப்பட்டிருக்கும்.

மணி 3-30 அடித்தது. கதவு திறக்கப்பட்டதும் பெயர்சொல்லி ஒருவரைக் கூப்பிடுஞ் சத்தங் கேட்டது. பின்பு 5-30 மணிபோல் குறைப்பிராணனில் இருவரைத் தூக்கிவந்து கூண்டிற் போட்டார்கள். கதவு தாழிடும் வரையில் ஒருவராவது அந்தத் திசையைப் பார்க்கவில்லை. உடம்பு முழுவதும் பிரம்பால் அடித்த தழும்புகள். காலின் பெருவிரலிலுள்ள நகங்கள் பிடுங்கப்பட்டு இரத்தம் ஓடிக்கொண்டு இருந்தது. எம்மால் என்னசெய்ய முடியும்? தவிக்கும் உயிருக்குத் தண்ணீராகிலும் கொடுக்க எங்களால் முடியுமா? சிறிதுநேரத்தால் ஆள் எமலோகம் சென்றுவிட்டார். எங்களுக்கும் இந்தக் கதி என்று வருமோவென ஏங்கினோம்.

சிறம்பான் N. T. துரை

மாலை 6 மணிக்கும் காலை கொடுத்த ஆகாரமே வழங்கப்பட்டது. எங்கள் பரிதாபத்தைப் பார்த்து இரங்குவதுபோற் சூரியனும்மறைந்தான். தெய்வத்தின்மேல் நம்பிக்கை வைத்துக்கொண்டு தூங்கினோம்.

எனது நண்பருக்கும் எனக்கும் தூக்கம் வரவில்லை. எங்கள் குடும்பங்களைப்பற்றியும், யுத்தம் எப்போது முடிந்து எங்களுக்கு விமோசனம் கிடைக்குமெனவும் பேசிக்கொண்டிருந்தோம். இதற்குள் நண்பருக்குக் கிடைத்த வடையையும் வாழைப்பழத்தையும் பங்குபோட்டுச் சாப்பிட்டோம். அந்தப் பழத்தின் தோலுக்காக எதிர்பார்த்திருந்த இருவரின் ஆவலைச் சொல்ல முடியாது. என் நண்பரின் மகன் பொலீஸ் வேலைபார்க்கும் முக்கியமான சிலருக்குப் பணங்கொடுத்தார். இதுகாரணமாகத் தினமும் சாப்பாடும், தினசரிப் பத்திரிகையும் கிடைத்தன.

இத்தனைக்கும் நான் செய்த குற்றம் என்ன? நான் குடியிருக்கும் வீதியிலுள்ள ஒருவர் 'ரேடியோ' வைத்திருந்ததற்காகச் சிறைசெய்யப்பட்டார். என்மீது சந்தேகங்கொண்டு என்னையுஞ் சிறைசெய்தார்கள். அவ்வளவுதான்.

# மஹா ஜனங்களுக்கு ஒருவார்த்தை

மகா ஜனங்களே! அன்பர்களே!

சிங்களரையுந் தமிழரையும், தமிழரையுந் தமிழரையும் பிரித்துவைக்க முயலும் பேர்வழிகளைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள்! அவர்கள் மேடைகளில் ஏறிநின்று உங்களைக் கவர்வதற்காகச் "சிங்களவனைத் தொலை; அவனை எதிர்" என்றெல்லாஞ் சொல்லும்போது அவர்கள் விஷ வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்! 'அந்தத் தமிழன் கெட்டவன், இந்தத் தமிழன் கெட்டவன்' என்னும் போதெல்லாம் தமிழர் ஒற்றுமையைக் குலைக்கிறார்கள்; இலங்கை மக்களின் எதிர்கால வாழ்க்கையைப் பாழ்படுத்துகிறார்கள் என்று அறியுங்கள்! எதிர்கால மக்கள்—உங்கள் பிற்சந்ததியார்—உங்களை நோகும்படியான இந்த விஷ விதையை நாட்டில் விதைக்கவிடாதீர்கள்! அதனால் விளையவிருக்கும் கேடோ மிகப்பெரிது. நாமெல்லோரும் இன்னும் எவ்வளவோ காலத்துக்கு ஒன்றாகவே இருக்கப்போகிறோம். ஒரு தாய் பிள்ளைகளுக்குள் இந்த வகுப்புவாதத் துவேஷமான—விரிந்த நோக்கற்ற—பின் விளைவதை எண்ணிப் பாராத ஆவேசக் கொள்கையைப் பரப்பலாமா? ஒரு நாட்டைப் பிரித்தல் யார்க்கு மெளிது. துண்டுபோடுதல் பெண்டிருஞ் செய்யத்தக்க செயல். ஒருநாட்டில் ஒற்றுமையை நிலவச்செய்தலன்றோ பெரியசெயல்; செய்தற்கரிய செயல். வகுப்புத் துவேஷப் பல்லவியைப் பாடிச் சிங்களச் சகோதரர்களுக்கும் உங்களுக்கும், தமிழ்த் தலைவர்களுக்கும் உங்களுக்குமிடையே பிரிவை — துவேஷத்தை — ஆதாரமற்ற வெறுப்பை வளர்க்கும் நோக்கத்தோடு, உங்களை அறிவற்றவர்களென்றும், உங்களை எந்தப்பக்கத்துக்கும் திருப்பலாமென்றும் கருதிக்கொண்டு மேடைகளில் ஏறிநின்று கொக்கரிப்போரைக் காணும்போது, உடனேயே எழுந்து தடுத்துவிடுங்கள்! அவர்கள் குறுகிய நோக்கத்தை அவர்களுக்கு உடனேயே எடுத்துக் காட்டிவிடுங்கள்! அஞ்சாதீர்கள்! தீமையை எதிர்க்க அஞ்சுதல் கூடாது. மகா ஜனங்களே! உங்களை மதிகெட்டவராக நினைத்துச் சொல்முழக்கால் மயக்க முயலும் அவர்களுக்குப் புத்தி புகட்டுவது உங்கள் கடனல்லவா? இதனைச் செய்யத் தவறாதீர்கள்!! இலங்கை யன்னை இதை உங்களிடம் எதிர்பார்க்கிறாள். அவளுக்குத் துரோகஞ் செய்யாதீர்கள்! நாமெல்லோரும் ஒருநாட்டு மக்கள். எல்லோரும் அவள் பிள்ளைகள். எல்லோரும் ஓரினம். இதை மறவாதீர்கள். மறவாதிருந்தால் நாம் உய்வோம். நாடு சுதந்திரமோ முன்னேற்றமோ அடையும். சிங்களவனைத் திட்டுவதாலும் பகைமையை வளர்ப்பதாலும் இது முடியாது. அன்பை—ஒற்றுமையை— வளர்ப்பதாலேயே ஒரு நாடு உய்யும்.

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வு."

இது சத்தியம்.

—நன்மைவிரும்பி

## உணவு அபிவிருத்தி இயக்கம்

### பொதுமக்களுக்கு வேண்டுகோள்

நாட்டில் உணவு அபிவிருத்தியைப் பெருக்குவதற்காகவும் கனிதரும் மரங்களை அதிகமாக உண்டாக்குவதற்காவும் பொதுமக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டுமெனச் சமீபத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் நிகழ்ந்த கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

வடமாகாண அதிபர், உதவி அதிபர்கள், இறை அதிகாரிகள், கிராமச்சங்கத்தலைவர்கள், உணவு அபிவிருத்தி உத்தியோகஸ்தர், கல்லூரி அதிபர்கள் உட்பட்ட ஒரு சபை இதற்கென வேண்டிய ஒழுங்குகள் செய்யும்.

இம்மாதம் 11-ந் திகதி கனிமரங்களை நாட்டும் வாரம் ஆரம்பமாகும். பனைமரங்களும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இதுசம்பந்தமான பிரசாரங்களும் கூட்டங்களும் சபையினரால் ஏற்படுத்தப்படும். இத்துறையில் அனைவரையும் ஒத்துழைக்கும்படி மேற்படிசபை வேண்டுகின்றது. விபரம் அறிய விரும்புவோர் செயலாளர், எம். ஆர். எம். ஜெபரத்தினம் உடுவில் என்ற விலாசத்துக்கு எழுதலாம்.

# கடற்றொழிலாளர் அம்பா

## [உடப்பு]

[ஈழகேசரி 22-9-46 இதழின் தொடர்ச்சி]

இத்தொடரினுள் கரையாருடைய மீன்பிடித்தொழிலும், கெளிறு ஓரா, சீலா முதலிய மீன் பெயரும், சோழ பாண்டிய மன்னர் வாழ்த்தும், மீனாட்சியம்மை, சமுத்திராதேவி ஆதிய தெய்வ வழிபாட்டு வழக்கும் தோன்றுகின்றன. முசிறியிலுள்ள சந்தந்தோனியார் கோவிலுக்கும், அங்கு அணுதியிலுள்ள சிவன்கோவிலுக்கும் ஒரு தொடர்புண்டு என்பது பரம்பரைக் கதை. இப்புலவர் இவ்விரு கோவில்களையும் சேர்ப்பதும் பாடுவதும் காணலாகும். உடப்பு மனிதர் முசிறியாரோ என்று ஐயுறவும் இடமுண்டு.

இனி, தொடர்ச்சி :

ஆடுறாளே தேவடியாள் அரண்மனைக்கு வாறேனென்று
கொஞ்சுறாளே தேவடியாள் கோயிலுக்கு வாறேனென்று
கோவில் அடிமையம்மா கொண்டாடும் பாலனடி
பால்போல் நிலாவையம்மா பகலெல்லாம் எங்கிருந்தாய்
மாசில் மறைந்திருந்தேன் மழைமேகம் சூழ்ந்திருந்தேன்
மழைக்கு நனையாதோ மயிலாள் சுருக்கூந்தல்
கூந்தல் பனையோலை கொடும்பனையின் எட்டோலை
எட்டோலை பூங்குழலாள் எழுதுமென்றாள் வாசகத்தை
எட்டிலுள்ள வாசகத்தை எழுதுமம்மா என்னுவில்
நாவு தவறாமல் நல்லகுரல் கம்மாமல்
ஏடு தவறாமல் எழுந்தகுரல் கம்மாமல்
குரலிற் குடியிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
பெற்றதாய் முதலையம்மா பெரியதாய் பேராசே
வளர்த்ததாய் வாசலிலே மங்கா மணிவிளக்கே
மங்காமல் நாமிருவர் வாலிபத்தில் சென்றோமே
சென்றேறிச் சென்றமர்த்தும் திரண்ட பொரிகெளிறே
வண்ணப் பொரிகெளிறே வானறியா ஓராவே
எண்ணிப் பகிரையிலே எடுத்தேன் ஓ ரோராவை
ஓராப் படுவலையோ ஒருதோணி மீன்படுமே
சீலாப் படுவலையே சிமாட்டி காவலையே
காவலையை வளையாமல் காரலுஞ்சோ றுண்ணாமல்
உண்ணலற்றார் உறக்கமற்றார் ஊஞ்சலாடப் பருவமற்றார்
பருவங் குலைந்தாளே பாரிமையில் ஆனாளே
ஆனார் சுவாமியய்யா அதற்கேற்ற அந்தோனியார்
அந்தோனியார் இவரானால் அழகுபுலித் தோலுமுண்டு
சொக்கலிங்கம் இவரானால் சூலமுண்டு வலக்கையிலே
வலக்கையில் குடமெடுத்து நடுக்கரையால் வாறபெண்ணே
வாற வழியிலே மண்கோட்டை ஏதெடியோ
மண்ணடுப்புக் கீறி மனையடுப்புக் கோலமிட்டு
கோலமிட்டுக் குரவையிட்டுக் குங்குமத்தால் நீராட்டி
வாறகப்பல் ஆர்கப்பல் மன்னன் துரை ராசன்கப்பல்
சீனக்கப்பல் வருகுதடி சிங்கக்கொடி பறக்குதடி
சிங்கம் உறங்கும்வனம் சிறுபுலிகள் தூங்கும்வனம்
காடை உறங்கும்வனம் கௌதாரி தூங்கும்வனம்
தூங்கி விழித்தானே துய்யகனைக் கண்டானே
அலறி விழித்தானே அன்றுகனைக் கண்டானே
கன்றுமான் கண்டானே கவரிமான் மீண்டகன்றை
மீண்டபல்லும் சடையழகும் நெருப்பெரிந்த கண்ணழகும்
கண்ணாளா! வேந்தாநீ கவியா கவிப்புலவா!
சொல்லு புலவாநீ சோமகுலப் பாண்டியனே
பாண்டிக் கரையாரும் பரகுருமோ ஒன்றானர்
ஒன்றானர் இரண்டானர் மூமதத்தந் தண்டானர்
தண்டுமரம் கொண்டுவிற்கும் தள்ளாடிப் பறைப்பயலே
பாவனொரு கப்பல்வைத்தான் பாருளக்கி மீன்பிடிக்க
கரையானொரு கப்பல்வைத்தான் கடலுளக்கி மீன்பிடிக்க
மீனாற் பெருத்தவலை மீனாட்சி அம்மன்வலை
சனத்தாற் பெருத்தவலை சமுத்திரா தேவிவலை
வளையல்கொள்ளும் சிலம்புகொள்ளும் வனத்தில்வாழும் குறமகளே!
குறத்தி குறம்பாடக் குறமகளாள் காதுகுத்த,
காதுகுத்தித் தோடிடவே கண்கறுக்க மையிடவே
மையு மிடுவாளே மைக்கேற்ற பொட்டிடுவாள்
பொட்டுடனே பூமணங்கள் பூஷணங்கள் பளபளென
பளபளென்று சங்கூதப் பாண்டியரே வாருங்கடி
வாருங்கடி முருகாயி, வள்ளியம்மன் முழைப்போட
வள்ளிக் குயிலாளே வரிக்குயிலே தாராவே
தாரார் தனஞ்சயனார் தருமர்குரு தேசிகனார்
சிங்கம் அழகியனார் சிறுமைக்கும் புண்ணியனார்
புண்ணியனார் போகவிட்ட பொன்னோலை வாசகத்தை
மன்னவனார் போகவிட்ட மகிழம்பூ வாசகத்தை
வாசம் கமகமென மாயமகள் கொண்டாட
மாயமகள் சுந்தரியே மணமுடித்தார் கோவலனும்
கோவலனும் மாதவியும் கோலவிளம் பாண்டியனும்
பாண்டியனின் தேவி பனித்தீர்த்தம் ஆடுகையில்
ஆடுமாம் தோகையில் அலையுமாம் கொம்பிரண்டு
கொம்பூரித் தட்டானைக் கொலைக்காரன் வில்லிபட்டான்
நாகசுரக் காரன்பட்டான் நடத்துமென்றார் பெரும்படையை
படையெழுந்து வருகுதடா படைமகனே சீராளா
சீரார் கமலருக்குச் சீதைவந்து வாய்த்ததுபோல்
பொன்னின் கமலருக்குப் பூவைவந்து வாய்த்ததுபோல்
வாய்த்தகனி வாழைகளாம் மடல்விரியாத் தாழைகளாம்

— அ. வி. ம.


**காங்கேசன்துறையில்**

திறமான இங்கிலீஸ் சீமேந்து, மலையாளம் கொழுக்கி ஓடுகள், செங்கல் மற்றும் பல சாய்ப்புச் சாமான்களும் விலை ச்சகாயமாய்க் கிடைக்குமிடம்:

**கார்க்கோ ட்ரூன்ஸ்போட் கம்பெனி**
(CARGO TRANSPORT Co.)
காங்கேசன்துறை

தந்தி விலாசம்: "நியூகோ"; டெலிபோன் நம்பர் 5

[2938]



வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!

தமிழ் எஸ். எஸ். ஸீ. பரீக்ஷைக்குரிய

1. கிருஷ்ணன் தூது (உரையுடன்) ரூ. 1-50
2. கிராதார்ச்சுனீயம் ,, 1-00
3. நாலடியார் (துறவறவியல்) ச. 60

தபாற் பாசல் மூலம் பெற விரும்புபவர்கள் ரூபா 3/40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

கிடைக்குமிடம்:
தனலக்குமி புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நினைவுத் திரை

சென்றவாரத் தொடர்ச்சி

மற்றும் மூன்று நாட்களிலும் கூடச் சந்தர்ப்பம் கிடைத்த போது எல்லாம் அவள் மாமியிடம் அலுவலாக வந்து என்னுடன் கதைத்துவிட்டுப் போவாள். சில சமயங்களில் நானே அவள் வீட்டிற்குப் போனேன். நான்கு நாட்களை எவ்விதம் கழிப்பது என்று எண்ணிய எனக்கு நான்கு மாதம்—நான்கு வருடங்களை இங்கு கழித்தால் என்ன? என்றாகிவிட்டது.

பரீட்சை முடிந்தது. வேண்டா வெறுப்பாக நான் வீட்டிற்குக் கிளம்பினேன். கமலாவிடமும் போனேன். அவள் எனது விலாசத்தை வாங்கிக்கொண்டு வழியனுப்பி வைத்தாள்.

* *

கமலாவுக்கும் எனக்குமிடையில் கடிதப் போக்குவரத்து நடக்கத் தொடங்கியது. இதெல்லாம் எனது நண்பன் சோமுவுக்குத் தெரியாமல் இருக்குமா? நான்தான் அவனிடம் ஒன்றும் மறைப்பதில்லையே! அவளிடமிருந்து வரும் கடிதங்களைக்கூட அவனிடம் காட்டுவேன். சந்தோஷத்துடன் அவன் அவைகளைப் படிப்பான். இதற்குப் பிறகு நான் சித்தப்பா வீட்டிற்கு மிகவும் கிரமமாகப் போய்வரத் தொடங்கினேன். எனக்குச் சித்தப்பா வீட்டிற்குப் போவதிலுள்ள சிரத்தையைக் கண்டு என் பெற்றோர் சந்தோஷமடைந்தார்கள்.

ஒருநாள் நண்பன் சோமுவும் நானும் சம்பாஷித்துக்கொண்டிருந்தோம். அப்பொழுது தபாற்காரன் ஒரு கடிதத்தைத் தந்துவிட்டுச் சென்றான். ஆவலுடன் பிரித்தேன். அதன் சாரத்தைக் கேளுங்கள்:

"அப்பாவும் அம்மாவும் எனக்கு ஒரு கல்யாணம் பேசிவிட்டார்கள். அவர் எனது சொந்த மைத்துனர்தான். எனது அம்மாவிடம் இந்தக் கல்யாணம் எனக்குப் பிடிக்கவில்லை யென்று எத்தனையோ தரம் சொன்னேன். அவர்கள் எவ்விதத்திலும் இதை நிறுத்துவதில்லை யென்றும்; இதற்கு மறுத்தால் வீண் தொந்தரவுகட்கு உள்ளாகவேண்டுமென்றும் கூறினார்கள். இப்பொழுது இருக்கும் இந்த நிலை என்னை எந்த வழியிற் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்று சொல்ல முடியாது. பெற்றோருடைய தொந்தரவு சகிக்க முடியாததாகிவிட்டது. இன்னும் எத்தனை நாட்களுக்கு இந்தப் பூமியில் ஜீவிப்பேன் என்பது சொல்லமுடியாது. ஆனால் ஒரு வார்த்தை எந்த விதத்திலும் உங்களைத்தவிர வேறு ஒருவரையும் கல்யாணம் செய்யமாட்டேன். வேறு எதை எழுதுவது என்று எனக்குத் தெரியவில்லை.'

## நடனம்

என்னுடைய தலை "கிர்" என்றது. நான் குறிபார்த்தெறிந்த கல் வேகத்தோடு பழத்தையும் கொண்டு நெடுந்தூரம் சென்றுவிட்டது. நான் அதை எப்படிப் பெற்றுக்கொள்வதென்று தெரியவில்லை. பித்துப்பிடித்தவன்போல் பேசாதிருந்தேன்.

அப்பொழுது சோமு சொன்னான். "அடே சும்மா வருந்தாதே. அவள் கட்டாயம் உன்னைத்தான் கல்யாணம் செய்வாள் இதற்கு முட்டாள்தனமாக மண்டையை உடைக்கிறாயே!" என்றான். அவனது வார்த்தை எனக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்ததாயினும் என்னால் அதை நம்பமுடியவில்லை. "எப்படி உனக்குத் தெரியும்" என்றேன் "நாளைக் காலை பார் எல்லாம்விளங்கிவிடும்" என்று சொல்லிச் சிரித்தான்.

* *

மறுநாள் காலை சூரியன் உதித்தது உலகத்திலுள்ள இருள் அகன்றது. பறவைகளுடைய கீதம் அன்றைக்கு ஏதோ புதிய மாதிரியாகப்பட்டது எனக்கு.

சோமு வீட்டு வேலைக்காரன் வந்தான். 'என்னடா' என்றேன்.

'உங்களுடைய சினேகிதர் இங்கு வரவில்லையா?'

எனக்குப் பெருவியப்பாக இருந்தது. 'இல்லை' என்றேன்.

திரும்பவும் 'அவன் அங்கு இல்லையா'? என்றேன்.

இரவு பன்னிரண்டு மணிவரைக்கும் அறையிலேயே புரண்டு கொண்டு ஏதோ புஸ்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார். அதற்குப்பின் என்ன நடந்ததென்று தெரியவில்லை. இரண்டுமணி இருக்கும் மாடு கட்டவிழ்த்துவிட்டுக் கலாட்டா பண்ணியது. நான் தனியே அதைப் பிடிக்கமுடியாமல் அவரை எழுப்பப் போனேன். அங்கே அவர் இல்லை. இந்நேரமாகியும் ஆள் வரவே இல்லை' என்று ஒரு மூச்சில் சொல்லி முடித்தான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. முதல்நாள் 'நாளைக் காலை பார் எல்லாம் விளங்கும்!' என்ற வார்த்தைதான் என்காதில் ஓயாமல் ஒலித்தது. ஆனால் அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்றுதான் எனக்கு விளங்கவில்லை.

காலையில் கதிரவனுடைய கதிர் அம்புகட்குப் பயந்து உலகத்தை விட்டோடிய அந்தகாரம் என் மனத்துள் ஒளிந்துகொண்டது.

நான் சோமுவை அவன் போகக்கூடிய இடமெல்லாம் போய்த் தேடினேன். வியர்த்தமாக முடிந்தது. 'ஏதாவது வீட்டில் கதைவழி உண்டோ' என்று அவன் வீட்டாரைக் கேட்டேன். ஏதோ கல்யாணம் ஒன்று பேசினதாகவும் அவன் அதற்கு மறுத்ததாகவும் அதில் இருந்து சிறு வாக்குவாதம் உண்டானதென்றும் அன்றிரவு சாப்பிடவேயில்லையென்றும் கூறினார்கள். 'ம்! அப்படியா?' என்று பெருமூச்சுடன் வீடு நோக்கி நகர்ந்தேன். சஞ்சலமாகிய பாரம் கீழ்நோக்கித் தள்ளியது, வீடுவந்து சேர்ந்தேன்.

வீட்டில் ஒரு கடிதம் வந்திருந்தது. கமலாவிடமிருந்துதான் வந்திருக்குமென்று எண்ணிக் கொண்டு பிரித்துப் படித்தேன். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அதைச் சோமுதான் எழுதியிருந்தான்.

'என் அருமை நண்பா! என்னால் அதிகம் எழுதமுடியவில்லை. கமலா எனது மைத்துனி. எங்களுக்குக் கல்யாணம் முடித்து வைப்பதற்கு இருபகுதியாரும் நிச்சயித்துவிட்டனர். இந்த விஷயத்தை இவ்வளவுநாளாக உனக்கு மறைத்து வைத்திருந்ததை யிட்டு வருந்தாதே!

'கமலாவுக்கு உன்னைத் தவிர மற்றையவர்களை மணப்பதில் விருப்பமில்லையென அறிகிறேன். நீயும் அவளைத்தான் காதலிப்பதாகப் பலதடவை கூறியிருக்கிறாய். நான் இங்கு இருந்தால் உங்கள் இருவருடைய வாழ்க்கையும் சிதையும். தவிர நண்பனுக்குத் துரோகியுமாவேன். என்னால் உங்களுடைய வாழ்க்கை சிதைவுறக்கூடாது. உங்களுடைய வாழ்க்கை ரம்மியமாக இருந்தால் நான் எங்கிருந்தாலும் பரவாயில்லை.

'நண்பா எனது—இல்லை உனது மாமனாருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அதாவது கமலாவை உனக்குக் கல்யாணம்செய்து கொடுக்கும்படி. நான் பிரிந்த அக்கத்திற்காக அவளை மணவாது விட்டுவிடாதே! உங்கள் வாழ்க்கை நீடிக்கக் கடவுள் அருள்புரிவாராக! நண்பா!

'இனி எனக்கு 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' தெய்வ சங்கற்பமிருந்தால் என்றாவது ஒருநாள் திரும்பச் சந்திப்போம்.'

இதைப் படித்து முடித்தேன். அதிகம் வர்ணிப்பானேன்? எனக்கு உலகமே வெறுத்துவிட்டது. கமலாவை மணக்கவேண்டுமென்ற இலக்ஷியம் பீரங்கியின் அதிர்ச்சியிற் பறந்த தூசுபோல் பறந்துவிட்டது. நண்பன் போனபின் எப்படி என்மனம் சாந்தி அடையும். அவனை எப்பொழுது சந்திப்பேன் என்ற ஆவல் மற்றைய ஆவல்களைத் தள்ளி உள்ளத்தைப் பிளந்துகொண்டு கிளம்பியது. ஆனால் அன்று போனவன் போனவன்தான்! இன்றுவரைக்கும் திரும்பவில்லை!

கமலாவை மணப்பதில் பின் எனக்கு ஒருவித ஆவலும் இல்லை. என்றாலும் அவளுடைய வாழ்க்கையைக் கெடுக்கக்கூடாதென்பதற்காகவும், நண்பனது விருப்பத்துக்குமாறாக இருக்கக்கூடாது என்பதற்காகவும் உலக சம்பிரதாயமாகக் கல்யாணம் செய்து கொண்டேன். இதோ! இந்தக் குழந்தைக்கும் நண்பனுடைய பெயரையே வைத்துவிட்டேன்.

* *

கையில் கிடைத்த கடிதம் ஏழு எட்டு வருடங்கட்கு முன் நடந்தவற்றை ஒன்றன்பின் ஒன்றாக நினைவூட்டியது. அப்பொழுது என் குழந்தை சோமு வந்து என் [illegible] கொண்டு சுவரில் மாட்டியிருந்த படத்தைக்காட்டி 'அப்பா அது ஆர்?' என்றது.

'அது மாமா' என்றேன்.

'எந்த மாமா'.

'அவனை உனக்குத்தெரியாது; அவன் இப்போ இங்கில்லை'

'எங்கே போட்டார்?'

'தெரியாது.'

'எப்போ வருவார் அப்பா! எப்போ வருவார்!'

பலதடவை இக்கேள்விகளைக் கேட்டான். எனக்குப் பதில்சொல்லத் தெரியவில்லை. பேசாதிருந்தேன்.

திரும்பத் திரும்ப 'எப்போ வருவார்' என்ற கேள்வியையே குழந்தை கேட்டுக்கொண்டிருந்தது.

என்கண்கள் நீரில் நிறைந்தன.

## 45-ம் இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டுக் கட்டளை

1945இன் பாதுகாப்புப் பிரமாணங்களின் (புடவைக் கட்டுப்பாடு) 20-வது பிரமாணப்படி எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைச் செலுத்துமுகத்தான் இதனால் மில்லில் இருந்து செய்யப்பட்ட கட்டுப்படுத்தப்பட்ட புடவைகள் இந்தியாவிலிருந்து இறக்கப்பட்டு, 1946-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ந் திகதிக்குப் பின் அல்லது அன்று தங்கள் சாலையில் இருந்து அகற்றப்பட்டால் அட்டவணையிற் காட்டிய விலையிலும் பார்க்கக் கூடவிற்க அல்லது விற்பதற்கு வெளியே வைக்க முடியாது எனக் கட்டளையிடுகிறேன்.

ஈ. ரெட்ரிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி

கொழும்பு
25-10-46

### அட்டவணை

மொத்த வியாபாரத்துக்கு: 1943இன் பருத்திப் புடவைகளதும் நூலதும் கட்டுப்பாட்டுக் கட்டளையால் இந்திய அரசாங்கத்தால் செய்யப்பட்டபடி இந்திய புடவைக் கமிஷனரால் நிர்ணயிக்கப்பட்டுத் தொடர்பான வேறு கட்டளையால் அதே வகையான அல்லது தன்மையான புடவைகட்குத்திருத்தம்செய்துகொண்ட ஆகக்கூடிய ஆலை வெளி விலையிலும் 55% ஏற்றம். அவ்வகையான புடவைக்கு இறக்குமதித் தீர்வை 5% கொடுக்கப்பட்டிருந்த தீர்வை 15% அவ்வகைப் புடவைக்குக் கொடுக்கப்பட்டிருப்பின் 54% ஏற்றம்.

சில்லறை வியாபாரத்துக்கு: இந்திய அரசாங்கத்தால் 1943-ல் பருத்திப்புடவை நூற்கட்டுப்பாட்டில் புடவைக் கமிஷனரால் நிர்ணயிக்கப்பட்டுத் தொடர்பான வேறு கட்டளையால் அதேவகையான அல்லது தன்மையான புடவைகட்கு திருத்தஞ் செய்து கொண்ட ஆகக்கூடிய ஆலை வெளி விலையிலும் 5% இறக்குமதித் தீர்வை தன் பங்காகக் கொடுத்திருந்தால் 82%உம் 15% கொடுத்திருந்தால் 90% உம் ஏற்றம். [2953]


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி
**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[2981]




## எப்பொழுதும்

# தன் - நம்பிக்கை



# தேக புனிதத்தால்
## உண்டாகிறது.

சகவாச அநுகூலம் — அவள் அப்படியேதான் — தேக புனிதத்தினால் உறுதிப்படுத்தப்படும் தன்னம்பிக்கையே இதன் இரகசியம் என்பதை அவள் அறிவாள். லைவ்போய் தேய்த்துத் தினசரி ஸ்நானம் செய்யவும், புனிதமான உறுதியோடுகூடிய சலிப்பற்ற உணர்ச்சியைப்பெற்று தேக புனிதத்தை உண்மையில் எதிர்பார்க்கவும். உமது முகத்திற்கும் கைகளுக்கும் லைவ்போய் உபயோகியுங்கள் — அது இப்படியான அழகு சோப்புகளைப் பார்க்கிலும் 20% சாந்தமானது.




# லைவ்போய்
## டொயிலட்
## சோப்

LBT. 14-169

LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest Circulation in Ceylon, India & Malay States

Vol. 17 | Chunnakam, Sunday, Nov. 10, 1946 | No. 16

## தமிழ் கூறும் சீர்திருத்தம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பதேயாகும். அவரெல்லாம், தாம் கூறும் கொள்கைகளின் வடிவங்களாகவேயிருந்தனர் எனலாம். 'கூட்டத்தில் தானே மரக்கறி உணவு நல்லதென்றேன். வீட்டில் ஏண்டி! மாமிச சமையலை நிறுத்திஞய் என மனைவியைக் கடிவோர் அன்று பெரும்பான்மையினர் அல்லர். சீர்திருத்தக்காரன் வாழ்க்கையே, அவனது நாருண்டைய பேச்சிலும், ஒரு கணத்தில் பலநாடுகளைமாற்றியமைக்க வல்லதாகும். இன்று சீர்திருத்தத்தில் உள்ள குறைகளுள் இது பெரிதாகும். ஒரு கூட்டத்தில் சிலர் நல்லவராகயிருந்தால் அவரைக் காட்டியே மற்ருேர் சீர்திருத்தஞ் செய்துவிடலாமென நினைக்க, நல்லோரும் இவர்களுடன் வைத்து மதிக்கப்பட்டுவிடுகிருர். ஆகையால் தலைவர்களும், அறிஞரும் தம் கூட்டத்தினர் அனைவரும் வாழ்வில் கொள்கைக் குயிர் கொடுப்போராக இருப்பதையே முதல் சீர்திருத்தமாகக்கொள்ள வேண்டும்.

உலகச் சீர்திருத்தக்காரரெல்லாம் அப்படியே 'வெற்றி' யடைந்துள்ளார்கள். நாயன்மார், ஆழ்வார், ராமாநுஜர், இன்று காந்திஜி முதலியோர் யாவரும் தமது வாழ்வின் மூலமே பேசிவருதலைக் காண்கிருேம். ஓய்வின்போது தம் பின்வருவோர்க்கு எழுதவும், பேசவும் செய்கின்றனர்.

சீர்திருத்தக்காரன் என்ற எண்ணமும், முயற்சியும் இல்லாமலே எவ்வளவோ அறிஞர் தம்வாழ்வின் மூலம் சீர்திருத்தப் பறைசாற்றிய பலரினும் நூறுமடங்கு மேம்பட்டு விளங்கிச் சென்றுள்ளனர். தனி மனிதனின் உண்மையான வாழ்வே பெரிய சீர்திருத்தமாகும். அதுவே உலகில் புரட்சியையும் நன்மைகளையும் கொண்டுவருவதுடன், நாடுகளையெல்லாம் மாற்றியமைக்கவும் வல்லதாகும். ஆதலின் ஏழைத்தனிமனிதன் வாழ்வு எவ்வளவு தனது உழைப்பால் உயருகின்றதென்பதைப் பொறுத்ததே சீர்திருத்தத்தின் சிறப்பும் பயனுமெல்லாம்.

தாமின்புறும் அறிவு, பண்பு, நலன் இவற்றைத் தன்னைப் போன்ற மனிதராயிருந்தும் தாழ்த்தப்பட்டு, நசுக்கப்பட்டு, வலியற்றுக் கிடக்கும் மக்களுடன் மற்ருேரும் நுகர்ந்து இன்புறுதலைக் கண்டு மகிழவேண்டுமென்றுபொங்கியெழும் உணர்ச்சி வெள்ளத்தில் தொண்டாற்றும் அறிஞனின் கடமை, தன் 'வாழ்க்கையையே சீர்திருத்த' உருவமாக வடித்தலே யென்பதனைவள்ளுவரும் வற்புறுத்துவதனைக் காண்கிருேம்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } No. 624

*In the matter of the intestate estate of the late Arumugasamy Kajendra of Mallakam, in Mallakam Parish, in the Valikamam North Division* Deceased

**Arumugasamy Nagendra** of Mallakam Petitioner

*Vs*

1. **Arumugasamy Kukendra** of Mallakam
2. **Arumugasamy Nageswary** of Mallakam
3. **Greta Nesam Spaulding** of Alexandra Road Wellawatta

Respondents

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire, District Judge, Jaffna on the 10th day of October 1946 in the presence of Mr. A. V. Bathasivam, Proctor on the part of the Petitioner abovenamed and the affidavit of the said Petitioner dated the 8th day of October 1946 having been read:

It is ordered that the petitioner abovenamed be and he is hereby declared entitled as the brother of the deceased to have Letters of Administration to the estate of the said deceased issued to him accordingly, unless the respondents above-named or any person or persons interested shall on or before the 20th day of November 1946 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 10th day of October 1946

Sgd. R. R. Selvadurai
District Judge.

[2951—ii]

## பெண்களும் வேதம் பயிலலாம்

### காசி இந்துப்பல்கலைக் கழகத்தின் முடிபு

இந்துமதசம்பந்தமான வேத நூல்களைக் காசியிலுள்ள பெண்களும் படிக்கலாம் எனக் காசி இந்து பல்கலைக்கழகம் தீர்மானித்திருக்கின்றது. இந்தியாவில் மத சம்பந்தமான ஞானத்தையூட்டும் சகல கல்லூரிகளையும் ஒன்றுகூட்டி சமஸ்கிருத மகா வித்தியாலயத்துடன் இணைக்கப்படும். இந்து மத சம்பந்தமான சகல அறிவையும் இங்குபெறலாம். மகாவித்தியாலயத்திற் சேர்ந்து பயில்வதற்கு செல்வி கல்யாணதேவி என்பவருக்கு முன்னர் அனுமதி கிடைக்கவில்லை. இப்போது அப்பெண்மணி வித்தியாலயத்தில் இடம்பெற்றிருக்கின்ருர்.

பண்டித மாளவியா அவர்களின் சேவைகளைப் பெண் குலத்தார் போற்ருமலிருக்க முடியாது.




## சீனி

சென்ற 21-10-46-ந் திகதி தொடக்கம் 2 கிழமைகளுக்கும் சீனி உபயோகிப்பவர்களுக்குரிய மிகுதியானசீனிப்பங்கீடு 4-11-46-ந் திகதி தொடக்கம் சகல உத்தரவுபெற்ற விநியோகஸ்தர்களாலும் சங்கக்கடைகளாலும் கொடுக்கப்படும்.

M. ஸ்ரீகந்தா
வடமாகாண அதிபர்க்காக

யாழ்ப்பாணம்
4-11-46 [2954]

## அகில இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

### கச்சேரி முன் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம் சுருட்டுத் தொழிலாளரின் மாபெருங் கூட்டமொன்று நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வடக்குவீதியில் புதன் கிழமை (6-11-46) கூடியது.

தோழர் ஆ. துரைராசசிங்கம் தலைமை வகித்தார். ஆயிரக் கணக்கான தொழிலாளர் சமுகமளித்திருந்தனர். தலைவர் பேசியதாவது, "உங்களது ஏகோபித்த சம்பள உயர்வான தீர்மானத்தை முதலாளிகள் அறிந்ததும் அவர்கள் தாங்களாகவே தொழிற்சாலைகளை பூட்டி விட்டனர். அதுவே இம்மாபெரும் வேலைநிறுத்தம் பரவவேண்டியதற்குக் காரணம். இதை உங்கள் ஒற்றுமைச் சக்தி மூலமே பெறமுடியும் என்ற பாடத்தை முன்னதாகக் கற்றுவிட்டீர்கள்" எனக் கூறினுர்.

பின்னர், ஊர்வலமாக ஏகாதிபத்தியம் ஒழிக, சேனநாயக்கா சோல்பரி ஒழிக, சமதர்மம் ஓங்குக என்ற கோஷத்துடன் கச்சேரியை நோக்கிச் சென்று கூட்டத்தினர் கச்சேரிக்கு முன்னுல் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

—கடிதம்

## வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம்

### தீர்மானங்கள்

சமீபத்தில் (5-11-46) நடைபெற்ற மேஷ் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் திருத்தியமைக்கப்பட்ட சம்பள மாற்றத்தில் ஆசிரியர்களுக்கு உள்ள பிழைகளை ஆராய்ந்து திருவாளர்கள் S. R. கந்தசாமி, K. கந்தையா, N. தம்பிரத்தினம் ஆகியோர் ஓர் மனுத்தயாரித்துக்கொண்டு சம்பளம் மாற்றும் சபைக்கு சங்கத்தின் தூதாய் செல்லவேண்டும் மென்றும்; மற்றெந்தப் பகுதிக்கும் சம்பளம் அளிப்பதில் ஏற்படாத கஷ்டத்தை வித்தியாபகுதியார் நேர்முகச் சம்பளம் பெறும் பாடசாலைகளுக்கு மாத்திரமே ஏற்படுத்திக் கொண்டதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

—கடிதம்

## இலங்கைத் தமிழர் கலாவிருத்திச் சங்கம்

### கோலாலம்பூர்

இம்பி ரோட்டில் உள்ள மேற்படி சங்கமண்டபத்தில் தீபாவலி பண்டிகை வைபவங்கள் விய ஞு ஐப்பசி மீ௨ (23-10-46) பிற்பகல் 6 மணிக்கு ஆரம்பமாயிற்று.

"தீபாவலி" என்னும் விஷயம் பற்றி ஸ்ரீமாந் த. சிவப்பிரகாசம் அவர்கள் (Indian Co-operative Officer K'lumpur) சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

"முருகன் திருவிளையாடல்" என்னும் சரித்திரத்தை சங்கீத வகுப்பிலுள்ள சில மாணவிகள் நடித்துக் காண்பித்தார்கள். மேடையில் திருக்கயிலையின் அமைப்பும், பழநியில் பழநிநாதன் பள்ளிகொண்ட வனப்பும் பாராட்டத்தக்கதாயிருந்தது. பக்கவாத்திய அமைப்பில் சங்கீத வகுப்பின் இரண்டு ஆசிரியைகளும் வயொலினும் ஆர்மோனியமும் வாசித்தார்கள். சங்க அங்கத்தினர் திரு. ச. அருளம்பலம் மிருதங்கம் வாசித்தார்.

சபைத்தலைவர் மு. கனகசபை அவர்கள் (Headquarters Medical Dept. Malayan Union) பண்டிகைக் கொண்டாட்டத்தின் [illegible] வந்தனம் கூறினுர். விழா 9-00 மணியளவில் நிறைவேறியது.

## கண்டி தென்பகுதி வரவு வாரக் கொண்டாட்டம்

கடந்த மாதம், 9-ந் திகதி சனிக்கிழமை மாலை (19-10-48) 2½ மணிக்கு மேஷ் கொண்டாட்டம் அம்பறைப்பகுதி அங்கத்தினர் திரு. A ரத்நாயக்க அவர்கள் தலைமையிற் கண்டி சிறினிற்றிக் கல்லூரி மண்டபத்தில் ஆரம்பமானது. மத்தியமாகாண வித்தியாதிகாரி திரு. S. K. இராசசிங்கம் அவர்களும் மற்றும் வித்தியாதரிசிகளும், வேறு பலரும், சமுகமாயிருந்தனர். இவ்விழாவை நடத்த ஒழுங்குசெய்த இப்பகுதி வித்தியாசரிசி திரு. T. J. இம்மானுவேல் அவர்களின ஆரம்பப் பேச்சின்பின் இவ்வருடத்தில் வரவு மிக ஒழுங்கான மாணவர்களுக்கு பரிசுகள் திரு. S. K. இராசசிங்கம், அவர்களால் வழங்கப்பட்டன. இன்னும் வரவில் அதிகவீதம் எடுத்த கட்டுக்கலை அரசினர் தமிழ்ப் பாடசாலைக்கு, ஜனுப்ஹாஜி M. இஸ்மெயில் அவர்களால் அளிக்கப்பட்ட, வெள்ளிக்கேடயமும் கட்டுக்கலை புத்த சிங்களப்பாடசாலைக்கு திரு. A. S. கருணரத்தின அவர்களால் உபகரிக்கப்பட்ட கேடயமும் வழங்கப்பட்டன. சிறுவர், சிறுமிகளின் நிகழ்ச்சிகளும் ஏற்படுத்தப்பட்டன.

—கடிதம்

## ஸ்ரீ R. தம்பிப்பிள்ளை

கோலாலம்பூர் விக்ரோறியா கலாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறியிருக்கும் ஸ்ரீ R. தம்பிப்பிள்ளை அவர்கள் சிறிதுகாலத்துக்கு இலங்கையில் தங்கியிருப்பார்கள். இப்பொழுது இவர் தமது ஜனன ஊராகிய உரும்பராயில் தங்கியுள்ளார். இவர் மலைநாட்டுக்குச் சுற்றுப்பிரயாணஞ்செய்து மலாயாவுக்கு இம்மாத முடிவுக்கு முன் புறப்படுவார்.

## பிரமஸ்ரீ K. இலக்ஷ்மண ஐயர்

கொழும்பு 'ரோயல்' கல்லூரி ஆசிரியராகும் பிரமஸ்ரீ K. இலக்ஷ்மணஐயர் B. A. (Hons) அவர்களுக்கு அண்ணாமலைச் சர்வகலாசாலையினர் தமிழ் ஏம். ஏ.ப்பட்டத்தைவழங்கியுள்ளார்கள்,

**Announcement**

- BATTERY CHARGING
- BATTERY REPAIRS
- DISTILLED WATER
- BATTERY ACID

*Repairs To:*
MOTOR AND
ELECTRICAL INSTRUMENTS

*Undertaken at Competitive Rates*

**Samuel, Sons & Co. Ltd.**
Hospital Road:: JAFFNA
T. 'Gram; 'ECHIRON'
T. 'Phone: No. 62

## பண்டித மாளவியா

பண்டித மதன் மோஹன் மாளவியா மலேரிய சுரத்தாற் பிடிக்கப்பட்டிருக்கின்ருர். நிலைமை கவலைக்கிடமாக விருப்பதாக வைத்திய நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஐந்தாம் திகதி அறிவு தெளிவாகவிருந்த போது "கலக நிலைமை எப்படியிருக்கின்றது? காந்திஜி உண்ணு விரதம் அனுட்டிக்கத் தீர்மானித்து விட்டாரா?" என்று கேட்டாராம்.

## ருஷியாவில்இலட்சாதிபதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள்" என்று சிலர், புது முக்கியத்துவம் பெற்ருர்கள்; தொழிற்சாலையில் நடைபெறும் பொருள் உற்பத்திக்கு இவர்கள் இப்போது முக்கிய பொறுப்பாளிகள் ஆனுர்கள். இவர்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 5000 ரூபிள்கள் சம்பளமும், வரும் லாபத்தில் பங்கும் கிடைத்துவருகின்றன.

பல இராணுவ உத்தியோகஸ்தர்கள் இன்று மாதம் ஒன்றுக்கு 3000-த்திலிருந்து 5000 ரூபிகள் வரை சம்பாதிக்கிருர்கள்.

இலியூஷின், லவோஷ்கின் முதலிய விஞ்ஞான நிபுணர் ஒவ்வொருவருக்கும் இரண்டுதடவைகள் 'ஸ்டாலின் பரிசு' கிடைத்தது. அத்துடன் இலியூஷினுக்கு சுமார் 6 இலட்சம் ரூபிள்கள் நன்கொடையாகக் கிடைத்தது. எனவே பணக்காரர்கள் ஏழைகள் என்பது ருஷியாவிற் கிடையாது என்று கூறுவது தவறு.

இவ்விபரம் தினசரியிலிருந்து எடுக்கப்பட்டது.

## வீட்டின் மீது இடிவிழுந்தது

**ஒருவர் மரணம் பலர் காயம்**

ஞாயிற்றுக்கிழமை (27.10.46)மாலை கனத்த மழையுடன் பயங்கரமான இடிமுழக்கமிருந்தது. ஹெந்தலையிலுள்ள ஒரு வீடு இடியால் தாக்கப்பட்டது. அவ்வீட்டு 'வாசிகளில் ஒருவர் கொல்லப்பட்டார். ஏனையோர் பலத்த காயத்துக்காளாகி மூர்ச்சித்துக் கிடந்தனர்.

இதுவரை கிடைத்த விபரங்களின்படி சம்பவத்தின் போது இவ் வீட்டுக்காரர்களான திரு வேல்ஸ் தம்பதிகளும் அவர்ளது இரண்டு வயதான மகளும் மிஸ் வான்கன்ஸ்ட்டர் ஸ்ரீமதி குணவர்தன என்னும் இரு விருந்தாளிகளும் ஏதோ கோயில் விஷயமாக பேசிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

இடி விழுந்ததும் இவர்கள் எல்லோரும் மூர்ச்சித்ததாகவும் மிஸ் வான்கன்ஸ்ட்டர் [32] சிறிது நேரங்களில் காலமானுரென்றும் தெரிகிறது.

**பரிசு ரூ. 6000-00**

**சந்திரன் குறுக்கு எண் போட்டி நிர். 2.**

முடிவு தேதி: 30-11-46

முதல் பரிசு ரூ. 3500-00; 2-வது பரிசு ரூ. 1750-00
3-வது பரிசு ரூ. 700-00; விசேஷ பரிசு ரூ. 50-00

போட்டி ஆசிரியரின் சரியான விடை இலங்கை வங்கி (Bank of Ceylon, Colombo) யில் 'டிபாசிட்' செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குறிப்பின் சட்டத்திற்குக் கூப்பன் வேண்டுவோர் நேரிலோ தபால்மூலமோ, பெற்றுக்கொள்ளலாம்.

**CHANDRALEKHA TRADING Co.** (Regd.)
73, Armour St., COLOMBO.
[2949]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலயம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1946. நவம்பர் 10உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org